
உ

" ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி-ஆவணி-புரட்டாதி 1996

இலண்டன்
ஸ்ரீ முருகன்
தேர்த்திருவிழாச்
சிறப்பிதழ்



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00




திருவர்வடுதுறை(நந்திகேச்வரர்)


ஆசிரியர்: திரு மு. நற்குணதயாளன் துணை ஆசிரியர்: திரு க. ஜெகதீஸ்வரன்

நிர்வாகப் பொறுப்பு: திரு வ.இ. இராமநாதன், துணை நிர்வாகம்: திரு. சிவ. அசோகன்

நிர்வாகக்குழு

திரு மாணிக்கம் சுரேஷ், திரு இ. முருகதாசன், திரு ந. சிவராசன்

திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம், திரு சி. அற்புதானந்தன், திரு பொ. சுந்தரலிங்கம்



**KALASAM, 42 Stoneleigh Road, Clayhall, Ilford, IG5 0JD, England**

**Tel : 0181 550 4233**

உ

# கலசம்

மணி 4 ஒலி 15


## ஆசிரியர் பேனாவிலிருந்து......

வணக்கம்!

உங்கள் கைகளில் வர்ணப்படத்தோடு இருப்பது எங்கள் கலசம்.! அழகுற அமைத்திருக்கிறோம்! கருத்துள்ள பல செய்திகளைத் தந்திருக்கின்றோம்.!15ஆவது இதழான இது அதிக பக்கங்களுடன் வருகிறது. தேர்மீது பவனிவரும் முருகப் பெருமானது லாவண்யத்தில் மயங்கிப்போய் நீங்கள் இருப்பது நன்றாகப் புரிகிறது. அவ்வப்போ இப் பக்கம் காலத்தின் கண்ணாடியாகவும் சமூகத்தைப்பற்றிய எங்களது பார்வையாகவும் இருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.பெரும்பாலும் நாங்கள் புலம்பெயர்ந்துள்ள எங்கள் சமூகத்தின் வருங்கால அங்கத்தவர்களைப்பற்றியே கருத்துக்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம்.

இப்போதெல்லாம் பெற்றார்களாகிய எங்கள் அபிலாசை பிள்ளைகள் பட்டம் பெற்றால் போதுமென்பதுதான்.

எங்களுக்கு எங்கள் பெற்றார் எப்படி மத அறிவைத் தந்தார்களோ அப்படி எங்கள் பிள்ளைகளுக்கு அந்த அறிவைக் கொடுப்பதில் எவ்விதமான அக்கறையும் இல்லாதிருக்கிறோம். எல்லாருமல்ல. ஒரு சிலர் மிக நேர்த்தியாகப் பிள்ளைகளை வளர்ப்பதையும் காண்கிறோம் .ஒரு சிலர் தங்கள் பிள்ளைகள் சமயவிழாக்களுக்கு வராமல் மைக்கேல் ஜக்சனின் பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தால் கௌரவம் என்று பெருமை கொள்வதையும் காண்கிறோம். பிள்ளைகளை தங்கள் வழிக்குக் கொண்டுவர இயலாத பெற்றார்கள் -இப்போ சமயம் படு "போர்" என்று தத்துவமே உருவாக்கி விடுகிறார்கள். பெற்றார்களே நாங்கள்மிக அவதானமாக இருக்கவேண்டிய கட்டம். வெள்ளம் வரப்போகிறது என்று தெரிந்தும் அணை கட்டாமல் இருப்பது மன்னிக்கமுடியாத தவறு. இந்தத்தவறை நாம் தொடர்ந்து செய்யப் போகிறோமா? அல்லது தவறுகளைத் திருத்த சங்கற்பம்கொள்வோமா?



-ஆசிரியர்-

# லண்டன் ஸ்ரீ முருகா போற்றி! போற்றி!

ஏற்றிவைத்த உலகினேழ்மையற்ற லண்டன்மா நகரில்
ஏற்றவரா யெம்மையெல்லாம் ஏமமுறக்காத்து
தேற்றுவித்த பத்தரெல்லாம் தொண்டாற்றித் தொழுதுகொள்ள
தோற்றுவித்த எழில் பதியாம் தோசமற்ற மனோப் பாக்கில்
ஊற்றுவித்த செல்வம் உறங்கா துயரவைத்து
ஊறும் பக்தியினை உள்ளத்தில் பெருகவைத்து
வீற்றிருக்கும் வீரதேவே லண்டன் ஸ்ரீமுருகப் பெருமானே
வேற்றவரும் புகழும் வேலனேயுன் பாதம்போற்றி போற்றி


வெள்ளிக்கிழமையும் வியத்தகு நன்னாளும் வெள்ளம்போல்
வழுவாத்திருப் பெற்ற வனிதையர் வளைந்து நிற்க
பள்ளிச் சிறுவரும் பாங்கான பாவையரும் பரிந்துருகி
பனுவல் பலபாடிப் பக்தியுடன் பரவிநிற்க
அள்ளித்திருவமுது அளவற்றிறைக்கும் அருட்பதியில்
அருள்கேட்டு அடியார்கள் அணுகிநிற்க
புள்ளி மயிலேறிப் புனிதமுடனூர்ந்து வரும் பராபரனே
புலம்பெயர்ந்தோர் காவலனே உன்பாதம்போற்றி போற்றி

ஆறும் அருந்நிழலே அருள்மழையே ஆறுமுகனே
அற்புதங்களாற்றுகின்ற அமரவேளேயுன்
நீறும் திருநீறும் நிறைந்த நல் ஔடதமாமுன்
நீண்டவேலென்றும் நித்திய காவலனாம்
கூறும் குசலங்கள் குறிப்பறிந்து களையவைத்து
குற்றமற்ற வேண்டுதலைக் குறையின்றி நிறைவேற்றி
நாறும் மலாக்கூண்டில் நலம் நல்க வீற்றிருக்கும்
நாயகனே லண்டன்ஸ்ரீமுருகா உன்பாதம்போற்றி போற்றி

செ. நாகேந்திரன்

# சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

- மு. நற்குணதயாளன் -



## ஏழு

தேன்திரு வாச கத்தைத்
தேர்ந்தவர், ஆய்ந்த செம்மல்
வான்சிறப் புரை, நமக்கு
வழங்கினார் வெல்லம் போலே!
நானதைப் படித்தேன், எங்கும்
நற்றமிழ் மிளிரக் கண்டேன்
ஏனிந்த உரைஎன் றிட்டால்
எல்லோரும் படிப்பதற்கே

என புலவர் இளஞ்செழியன் அவர்கள் கூறியிருக்கிறார். திருவாசகத்துக்கு இலகுவாக பொருள் கூறும் முயற்சியிலும் மாணிக்கவாசகரின் சமூகப் பார்வையினை வெளிக் கொணர்ந்து சமூகவியலாளராக அவரைக் காட்டும் முயற்சியிலும் முதலில் சிவபுராணத்தையும் பின்பு திருவெம்பாவையையும் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். திருவெம்பாவையில் இது இரண்டாவது அங்கமாகும். சென்ற கலசத்தில் திருவெம்பாவையில் இருபது பாடல்கள் என்று கூறுவதற்குப் பதிலாக இருபத்தொரு பாடல்கள் எனத் தவறாகக் கூறியிருந்தேன். இதனைப் பெருமனதோடு திருத்திக் கொள்ளுமாறு பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். இது வரையில் இரு பாடல்களைப் பார்த்தோம். மூன்றாவது பாடல் பின்வருமாறு.

முத்து அன்னவெண் - நகையாய்! முன்வந்து எதிர்எழுந்து ''என் அத்தன், ஆனந்தன், அமுதன்'' என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய், வந்து உன் கடைதிறவாய்
பத்து உடையீர்! ஈசன் பழ அடியீர்! பாங்கு உடையீர்!
புத்து அடியோம் புன் மைதீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ?
எத்தொநின் அன்புடைமை? எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ, நம் சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கு- ஏல் ஓர் எம்பாவாய்!

இப்பாடலில் நாடகத்தன்மை இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. வீட்டிலே இருப்பவளை துயில் எழுப்புவதற்காக சிலர் வருகிறார்கள். வருபவர்களுக்கும் வீட்டிலே இருப்பவளுக்கும் இடையில் நடைபெறும் உரையாடலை எவ்வளவு அழகாகக் கவிநயத்தோடு கூறுகிறார் மாணிக்கவாசகர். ஒரு கவிதையின் சிறப்பு அதை எழுதுகின்ற கவிஞனை கவிதைக்குள் வாசகன் தேடத் தூண்டுவதாக இருக்கவேண்டும். சிலவேளைகளில் வீட்டிலிருப்பவள் தான் மாணிக்கவாசகரா என்று எண்ணத்தோன்றுகின்றது. சில சமயங்களில் வீட்டிலிருப்பவளைத் துயில் எழுப்புவதற்காக வந்திருப்பவர்கள்தான் மாணிக்கவாசகரா என்றும் எண்ணத்தோன்றுகின்றது. அல்லது இவர்கள்

இருசாராருமே இல்லாது மூன்றாவது ஆளாகத தோன்றியும் தோன்றாமலும் மாணிக்கவாசகர் நிற்கின்றாரா என்றும் ஐயுறக்கூடியதாகவுள்ளது. ஆக மொத்தத்தில் மாணிக்கவாசகர் ஒரு தேடலை உருவாக்குவதில் வெற்றிபடைத்திருக்கிறார் என்றே கூறலாம்.. திருவெம்பாவையில் இத்தேடல் தன்மை கூடுதலாகத் தெரிவதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. திருவெம்பாவையில் தூக்கத்திலிருந்து எழுப்பப்படுதலை நாம் வெறுமனே தூக்கவிழிப்பாகக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் ஒவ்வொருதரம் தூக்கத்தை விட்டு எழுப்பும்போதும், எழுந்து இறைவனின் புகழைப்பாடு என்று கூறப்படுகின்றது. அதாவது நீ இறைவனை மறந்து உலகியல் வாழ்க்கையில் அமிழ்ந்து சுகபோகியாய் உறங்கிக்கிடக்கிறாய் - அந்த உறக்கத்திலிருந்து நீ விழித்து மெய்யுணர்வு பெறவேண்டும் என்பதாகவே கருதப்படுகின்றது. ஆக இந்த அடிப்படையில் திருவெம்பாவையின் மூன்றாவது பாடலின் பொருளை நோக்குவோம்.

*முத்துப்போன்ற சிரிப்புடையவளே!*
*எங்கள் முன் எழுந்து வந்து இறைவன் புகழை அத்தன், ஆனந்தன், அமுதன் என்று நீ வாயூறி தித்திக்கப்பேசேன்! என்று வந்தவர்கள் துக்கத்திலிருப்பவளைப் பாாத்துக் கூறுகிறார்கள். அவளோ கிண்டலாக நீங்கள் இறைவன் மீது பக்தியுடையவர்கள். ஈசனுடைய பழைய அடியவர்கள்! வழிபடும் வழிகள் எல்லாம் தெரிந்தவர்கள். நாங்களோ புதியவர்கள். எங்களது அறியாமையை நீக்கி பொறுத்து ஆட்கொண்டால் என்ன? என்று கேட்கிறாள். இவளது கிண்டலைப் பார்த்த வந்தவர்கள், எங்களை ஏன் ஏமாற்றுகிறாய்? நீயா புதியவள்? இறைவன் மீது வைத்திருக்கும் காதல் எங்களுக்குத் தெரியாதா? எங்களுக்கும் உனக்கும் மட்டுமல்ல ஞானத் தெளிவு கொண்ட எல்லோருக்குமே அவனைப் பாடத் தெரியும். உன்னைப்போய் எழுப்ப வந்தோம்பார். எங்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்.*

இவ்வாறு அதிகாலையில் தம் நண்பிகளை எழுப்பி, பின்பு இறைவனைப் புகழ்ந்து பாடும் கன்னிப் பெண்களைச் சில சமய ஆய்வாளர்கள் நவசக்திகள் என்று கூறுகின்றனர். நவசக்திகளாவன மனோன்மணி, சர்வபூத்தமணி, பெலப்பிரமதனி பெலவிகாரணி, காளி, சௌத்திரி, சேட்டை, வாமை, சிவசக்தி ஆவர். இந்த வகையில் பார்க்கும்போது முதலாவது பாடலில் மனோன்மணியானவள் சர்வபூத்தமணியை எழுப்புவதாகவும் இரண்டாவது பாடலில் சர்வபூத்தமணி பெலப்பிரமதணியை எழுப்புவதாகவும் மூன்றாது பாடலில் பெலப்பிரமதனி பெலவிகாரனியை எழுப்புவதாகவும் கொள்ளலாம் . ஆக நான்காவது பாடல் பெலவிகாரணியானவள் காளியை எழுப்புவதாகக் கொள்வோம். முன்பு கூறியபடி தேடல் பயணத்தில் தற்சமயம் நவசக்தியை மையமாகவைத்து பயணம் ஆரம்பித்துள்ளமையை மனதில் கொள்ளவேண்டும். அடுத்தபாடலைப் பார்ப்போம்.

**ஒள் -நித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ!**
**வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரா?**
**எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்**
**கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே!**
**விண்ணுக்கு ஒரு மருந்தை வேதவிழுப் பொருளை**
**கண்ணுக்கு- இனியானைப் பாடிக் கசிந்து உள்ளம்**
**உள்நெக்கு நின்று உருக யாம் மாட்டோம் நீயேவந்து**
**எண்ணி, குறையில், துயில் - ஏல் ஓர் எம்பாவாய்.**

*காளி நிதானமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறாள். பெலகரணி காளியிடம் வந்து,*
*ஒளி முத்துப்போலச் சிரிப்பவளே! இன்னுமா உனக்கு விடியவில்லை? என்கின்றாள். இவளின் சத்தத்தால் கண்விழித்த காளி,*
*வண்ணக்கிளி மொழியாள் எல்லோரும் வந்து விட்டார்களா? என்று வினவுகிறாள். உடனே பெலகரணி அவளைக் குறும்புடன் பார்த்து,*
*எண்ணிச் சொல்கிறோம்! அது வரைக்கும் காலங்கடத்தாமல் எழுந்திரு. விண்ணவர் மனநோய்க்கு மருந்தாக இருப்பவனை, வேதங்களால் புகழப்படும் மேலான பொருளை கண்ணுக்கு இனியவனை, நெஞ்சம் உருகிப் பாட நாங்களெல்லாம் வந்துள்ளோம். நீயும்வா! என்கிறாள். இவர்களோடு மற்றொருத்தி குறும்புக்காரி. அவள் இடைமறித்து-*
*நாங்கள் எல்லாரையும் எண்ணிக் கொண்டிருக்க முடியாது. நீயே வந்து எண்ணிக்கொள். நீ நினைப்பதுபோல் யாரேனும் வரவில்லையாயின் மீண்டும் துங்கப்போ! என்கிறாள்.*

இங்கு கவிதைப் பூவுடன் நாடகத்தன்மை கலப்பதை எவ்வாறுதான் கூறுவது? இதற்குத் தமிழில் எங்குதான் வார்த்தையைத் தேடுவது?
இன்னும் இப்படி எத்தனை எத்தனை சுவைகள்.....

(இன்னும்வரும்.............)

# காரைக்காலம்மையார்

**வரதா சண்முகநாதன்**

பெரிய புராணத்தை இயற்றி எமக்களித்த சேக்கிழார் பெருமான் பெண் நாயனார்களுள் அரியதொரு பதவியை புனிதவதியாருக்கு அளித்துள்ளார். புராணம் என்றால் கட்டுக்கதைதானே, நமக்கேன் அந்த விவரமெல்லாம் எனத்தள்ளி விடு வோரும் இக் காலத்தே உண்டு. ஆராய்வு மனப்பான்மையும் செய்மு றையினாலேதான் சகல உண்மை களும் உணரப்படவேண்டும் என்ற விஞ்ஞான முறைக்கல்வியினாலும் பயிற்றப்படும் இக்காலச் சைவப்பெரி யாரும், பிள்ளைகளும் புராணச் செய்திகளையும், அற்புதங்களையும் நம்பவேண்டும் என்பதற்கில்லை. நாம் அந்த அற்புதங்களை நேரிலே காண வில்லை எனவே நாம் நம்புவதற்கில்லை என வாதிப்பது தவறு. இந்நிலையிலே நாம் இன்று கொண்டாடும் காரைக்கா லம்மையார் குருபூசை நமக்கு எதனை நினைவுபடுத்த வேண்டும்.

இவ்வம்மையார் ஏறத்தாழ ஓராயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன் தென்னிந்தியாவில் காரைக்கால் என்னுமிடத்தில் வாழ்ந்தார். இவர் சிறு குழந்தைப்பருவம் முதல் ஆண்டவனிடத்தில் ஆறாத பக்தியுடையவராய் இருந்தார். இறைவனின் பெயரை இடை விடாது கூறிவந்தார். கூர்ந்து நோக்கின் அவரது பெற்றோர் அவருடைய பால பருவ பக்தி ஈடுபாட்டிற்குக் காரணமாய் இருந்தி ருக்க வேண்டும். அவரே தன்னைப் பற்றிக் கூறுவதாவது:

**பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்**
**சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்**
**நிறந்திகழும் மைஞ்ஞான்ற கண்டத்துவா னோர் பெருமானே**
**எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.**
**இடர்களையாரேனும் எமக்கி ரங்கா ரேனும் படரும் நெறிப ணியா ரேனும் -சுடர்உருவில்**
**என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்**
**கன்பறா தென்னெஞ் சவர்க்கு.**

இவரை நாயன்மார் வரிசையிலே ஏற்றுக்கொண்டாரே சேக்கிழார் என்னென்ன ஆத்மாத்தமான சாத்வீகப்பண்புகளை இறையருள் பெற்ற மகிமையை இவரிடம் கண்டார். புனிதவதியார் செல்வ மும் செல்வாக்கும் பெற்ற குடும்பத்தில் பிறந்தார். செல்வச்சூழலிலே வளர்ந்தார். மணப்பருவம்வந்ததும்மணம்முடித்தார். சைவத் தமிழ்ப் பண்பாடு போற்றும் விருந் தோம்பலை ஏற்று மகிழ்ந்தார். அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பம் இந்த விருந்தோம்பல் என்ற பண்பி னாலேயே ஏற்பட்டது. இத்தரு ணத்தில் அம்மையாரின் வாழ்க்கை யைப் பற்றி சிறிது சிந்திப்போம்.

புனிதவதியாரின் கணவர் பரம தத்தன் இரு மாம்பழங்களை தம் மனைவியிடம் கொண்டு வந்து கொடுத்தார். பின் அந்தப் பழங்க ளில் ஒன்றைப் புசித்து ருசித்த பின் அடுத்த பழத்தை எடுத்துவரும்படி தம் மனை வியிடம் கேட்டார். புனிதவதியார் திடுக்கிட்டார். கணவருக்குப் பயந்து உண்மையைச் சொல்லாது விட்டாரா? அல்லது ஐயோ பாவம் ஆசையுடன் மற்றப்பழத்தையும் கேட்கின்றாரே, அவரது ஆசை யைப் போக்க அடுத்த மாம்பழத்தையும் கொடுத்தா லல்லவோ நல்லது என்று நினைத்தாரோ தெரியவில்லை. இன்னும் சிறிது சிந்தித்தால் அக்காலத்தில் கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன் என்று காலால் இட்டதைத் தலை யால் செய்யும் நிலையிலே தனது உண்மை நிலையை எடுத்துக் கூறத் துணிந்தாரில்லையா? அல்லது கணவன் தன் மேல் ஏதேனும் சந்தேகப்பழி பாவம்

சுமத்துவார் என்று நினைத்தாரா? உள்ளே சென்றார். மனமுருகி வேண்டினார். பரமசிவ பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்தார். இன்னொரு அருட் பழத்தைப் பெற்றார். கணவனிடம் கொடுத்தார். சாதாரண பூலோக மாம்பழத்தின் உருசியில் மூழ்கி இருந்த பரம தத்தன் இந்தப் பழம் நான் கொண்டு வந்த பழம் அல்ல. இதன் உருசியோ எத்தனை எத்தனையோ மடங்கு அதிகம். இது எங்கிருந்து வந்தது புனித வதி? என்று கேட்டான். புனித வதியார் உண்மையை விளக்க மாகக் கூறினார். நீங்கள் முன் கொணர்ந்த பழத்தில் ஒன்றை சிவ அடியாருக்குக் கொடுத்து விட்டேன். நீங்கள் இரண்டா வது பழத்தையும் கேட்டபடியால் இறைவனை இரந்து வேண்டி னேன். இதனைப் பெற்றேன் என்றார். நீ சொல்வது மெய்யானால் இன்னொரு பழத்தைக் கொண்டு வா பார்ப்போம் என்றான் பரமதத்தன். ஒரு கனி பெற்ற அன்னை இரண்டாவதையும் எளிதில் பெற்றார். இதுவே அவர் வாழ்க்கை யின் முக்கிய திருப்பம். சாதா ரண மானிடப் பெண்ணா யிருந்த புனிதவதியார் அருட்செல் வம்பெற்ற நாயனார் வரிசையில் முதற்படியில் நின்றார்.


அம்மையார் அருள்நெறி வாழ்வில் சிறந்து விளங்கினார். பக்தி நெறி யில் பரவசமாகி தன் பக்திநெறியில் பரமனையும் பணி செய்யச் செய்தார். அவரது உயர்ந்த தன்மையை அறிந்த பரமதத்தன் அவருக்கு உரிய மரியாதையையும் பணிவை யும் கொடுத்தான். காரைக்கால் அம்மையார் தனதுபக்தி நெறியால் மாத்திரமல்ல கற்பு நெறியாலும் உயர் பதவி எய்தினார். கணவனைப் பிரிந்து வாழ்ந்த காலத்தில், அதாவது இவரது அருள் மகிமையை அறிந்த பரமதத்தன் இன்னொரு பெண்ணை மணந்து தூரத்தில் இருந்து தனது மனைவியின் பெருமையை உணர்ந்து தன்மகளுக்குப் புனிதவதி என்ற பெயரை இட்டு வாழ்ந்த காலத்தில் புனிதவதியார் சிவன்பால் தன் சிந்தை முழுவதையும் செலுத்தி வாழ்ந்தார். தன் கணவன் தன்னை விட்டு நீங்கியபின்பு தன் ஊனுடம்பு அவசியமற்றதென நினைத்துப் பேயுடம்பு வேண்டிப் பெற்றார். இவர் இறைவன் மேல் ஆக்கிய பாடல்கள் 143 ஆகும்.

**காடு மலிந்த கனல்வாய்**
**எயிற்றுக் காரைக்காற் பேய்தன்**
**பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம்**
**நாசமே**

என்கிறார். இவர் பாடிய பாடல்கள் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், மூத்ததி ருப்பதிகம் என்பனவாகும். பக்தியினால் விளைந்த வைராக்கி யத்தையும் அதன் பயனாக வந்த ஆசை அறுத்த நிலையினையும் உணர்த்தி, அம்மையார் எம் முன் பேயாக நிற்கிறார். திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், மூத்ததிருப்பதிகம் ஆகிய இரண்டிலும் பேய்கள் எவ்வாறு சுடுகாட்டில் அலறி உளறித் திரிகின்றன என்பதையும் தன் அற்புதத் திருவந்தாதியிலும் திருவிரட்டை மணி மாலையிலும் தன் நினைப்பு செயல் யாவும் இறைவனுக் காளாவது ஒன்றே என்பதனைத் திரும்பத் திரும்பக் கூறுவதாக அமைந்துள்ளது. இவரது பாடல் ஒன்றில் **சோதியாய் சிந்தையுள் தோன்றுமே** என்ற சொற்றொடர் ஆழ்ந்து சிந்திக்கப்படவேண்டிய ஒன்றாகும். இறைவனை உருவாக வழிபடும் தன்மையும் அருவாக, அருவுருவாக வழிபடும் தன்மையும் சைவர்களிடையே உண்டு. சிவனின் உருவைப் பலபட வர்ணிக்கும் அம்மையார் சோதியாய் சிந்தையுளே அருவான இறைவனின் சக்தியை எம்முன்னே காட்டுகிறார். இவருக்குப் பின்வந்த சமயப் பாடகர்கள்

**சோதியே சுடரே சூழொளி விளக்கே**
என்றும்
**ஒளிவளர் விளக்கே உலப்பிலா**
**ஒன்றே** என்றும்
**ஊனினை உருக்கி உள்ளொளி**
**பெருக்கி** என்றும்
பாடியுள்ளனர்.

சுருங்கக்கூறின் காரைக்கா லம்மையார் திறம் குன்றாத ஒரு குடும்பப்பெண். இறைவனின் சிந்தை கவர்ந்த ஒரு பக்தி நிறைந்த பதிவிரதை. ஆண்க ளுக்கும் பெண்களுக்கும் அறிவு தீட்டக்கூடிய ஓர் அம்மை. இவ்வுலக வாழ்வை ஒரு கனியாகவும் ஆத்மீக வாழ்வை மறுகனியாகவும் தனது கண வனுக்கு ஈந்து இறுதியில் எமக்கு என்றும் மறக்கக் கூடாத அருட் கருத்தினைத் தமது அருட் பாடல்கள் மூலம் அளித்து உடம்புள்ளபோதும் இறைவனை வாழ்த்தலாம், உடம்பொழிந்த, ஆசைகள் அறுந்த எலும்புக்கூட்டு வாழ்விலும் இறைவனின் அருளைப்பெறலாம் என்ற கருத்தை நம்முன் வைத்தவர் இவர்.



# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

திரு A.விசாகரத்தினம்

யதார்த்தமாக, விஞ்ஞானத்தை நாம் அறிவியல் என்று கூறுகிறோம். ஆம். அது உண்மையில் அறிவியலேதான். ஏனெனில் எந்த ஒரு பொருளையும், அதன் தத்துவங்களை நாம் அறிவைக்கொண்டு ஆராய்ந்து அறிவதால் இதை அறிவியல் எனக் கூறுகிறோம். இந்த அறிவால் ஆராய்ந்து அறிந்த முடிவுகளை விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பாக ஏற்றுக்கொள்ளுகிறோம். இவ்வேளை இந்த ஆராய்ந்து அறியும் அறிவோடு மனிதனிடம் உணர்வு என்னும் அற்புதமான சக்தியும் உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மனித வாழ்க்கையில், சில சமயங்களில், சில மனிதர்களுக்கு அறிவு மேம்பட்டு உணர்வு கூடியிருப்பதையும், சில சமயங்களில் அதே மனிதனுக்கு உணர்வு மேம்பட்டு அறிவு கூடிச் செயற்படுவதையுங் காண்கிறோம். அறிவு செயற்படும்பொழுது மனதில் அமைதி நிலவும் என்று கூறுவதற்கில்லை. காரணம் அறிவு பகுத்துக்கொண்டே போகும் இயல்புடையதாகும். ஆதலால் எதனை எடுத்துக்கொண்டாலும் அப்பொருளின் தோற்றம், வளர்ச்சி, இயல்பு என்றெல்லாம் பகுத்துக் காண்பது அறிவின் இயல்பாகும். ஆனால் உணர்வோ நமது அறிவுக்கெட்டாது விரிந்தும் பரந்தும் இருப்பனவற்றையெல்லாம் தாண்டி அவற்றினிடையே ஓர் ஒருமைப்பாட்டை உணரும் இயல்புடையதாகும். அறிவை, பிளந்து காணும் (அதாவது analytic) இயல்புடையதென்றும், உணர்வை, ஒருமைப்பாடாகக் காணும்(அதாவது synthetic) இயல்புடையதென்றும் கூறலாம். மனித வாழ்க்கையில் சில சமயங்களில் இந்த அறிவு உணர்விடம் சென்று அடங்கிவிடுகிறது. இந்த உணர்வைப் பிரக்கி என்றும் கூறுவதுண்டு. இது சமுத்திரம் போன்றது. அதாவது ocean of memory. இதன் முனைப்பே அறிவாகும். உதாரணத்திற்கு, உணர்வு சமுத்திரமானால் அறிவு அதன் அலையாகும். புத்தி அதன் நுரையாகும். சமுத்திரம் ஆழமானது, அமைதியானது. அதில் அலைகள் எழுந்தவுடன் அது கடலாறாய் மாறிவிடுகிறது. இந்த அறிவுக் கடலில் எழுகின்ற அலைகளும், அதன் நுரைகளும் எங்கேயாவது ஒரு கரையை நோக்கிச் சதா தாவிக்கொண்டேயிருக்கும். ஆனால் ஒப்பற்ற உண்மை என்னும் மாணிக்கமோ, (அதாவது மெய்ப்பொருளோ) சமுத்திரத்தின் அடித்தளத்திலிருந்து சதா ஜொலிக்கிறது. இந்தக் கொந்தளிக்கும் அலை ஆட்டத்தாலும், நுரைப் பிரவாகத்தாலும் அந்த மெய்ப்பொருளைக் கண்டு அநுபவிக்கவோ, சென்று அடையவோ முடிவதில்லை. ஏன்? இவை சதா மேற் பரப்பிலேயே கொந்தளிக்கின்றன. இப்படி ஆர்ப்பரிக்கும் அலைகளும் நுரைகளும் அடங்கி அவை சமுத்திரத்தில் சரணாகதி அடையும்பொழுதுதான் உணர்வு என்னும் சமுத்திரத்தின் அடித் தளத்தில் அந்த மெய்ப் பொருளாகிய மாணிக்கத்தின் ஜொலிப்பை, அதன் பிரகாசத்தைக் காண, கண்டு அநுபவிக்க முடியும். அமைதிக்குள்ளேதான் ஆனந்தம் இருக்கிறது.

இதற்கு ஓர் உதாரணம் திரு விவேகானந்தர். அவர் ஓர் அறிவுக்கடல். அவரை ஏகசந்தக்கிரகி என்று கூறுவதுண்டு. வேதக் கடல் என்று கூறத்தக்க பெருமை உடையவர் அவர். இப்படியான அறிவாளி எங்கே சென்று சங்கமமானார்? அவரை ஒத்த ஓர் பேரறிவாளரிடம் அடைக்கலமாகி யிருந்தால் அதில் வியப்பதற்கு ஒன்றுமிராது. ஆனால் கல்வி வாசனை எதுவுமே ஒரு சிறிதும் இல்லாத இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் அல்லவா சரணடைகிறார். அவர் இப்படியாகக் கல்வி வாசனையற்ற ஒருவரிடம் ஈடுபாடு கொண்டதற்காக விவேகானந்தரின் நண்பர்கள் அவரை எள்ளி நகையாடினார்களாம். ஆனால் இந்த அறிவுக்கடலாகிய நரேந்திரன் என்ற விவேகானந்தர் முடிவில்லாத ஓர் உண்மைப் பொருளை உணர முடிந்தது, உணர்வே வடிவாகிய இராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் மகானிடம் சரணடைந்த பிற்பாடேதான்.

மனிதனிடம் இயல்பாக அமைந்துள்ள அறிவு, உணர்வு ஆகிய இவை இரண்டினிடையே போராட்டம் நிகழுமாயின் இறுதியில் அறிவு உணர்விடம் சரணடைவதைக் காணலாம். உலகந் தொடங்கிய காலந் தொட்டு இவ்வுண்மை நிகழ்ந்துகொண்டுதான் வருகிறது. ஏனெனில் உணர்வின் பெருமையை உணர்ந்து அதன் காரணமாகப் பக்திமான்களாக மாறிய பல அறிவாளர்கள் நம் முன்னோர்களில் இருந்திருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக மிகச் சிறந்த அறிவாளியாகிய தலைமை அமைச்சர் மாணிக்கவாசகர், நான் யார்? எனது உள்ளம் யாது? ஞானங்கள் யாவை? என்னை யாரறிவார்? என்ற வினாக்களுக்கெல்லாம் அறிவால் அதன் துணைகொண்டு விடை காண முயன்றவர். இந்த வினாக்கள் உணர்வில் தோன்ற முடியாதவை. இவை அறிவுலகத்திலேதான் தோன்றும் வினாக்களாகும். இப்படியாகப் பல பெருமக்கள் அறிவின் துணை கொண்டு தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டாலும், இறுதியில் உணர்விடம் சரணடைந்து பக்தர்களாக மாறிவிட்டார்கள். இதற்கு அசோகச் சக்கரவர்த்தியும் ஓர் உதாரணமாவர்.

இந்த அறிவியல் என்னும் விஞ்ஞானமானது அறிவை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் மெய்ஞ்ஞானமோ உணர்வை அடிப்படையாகக் கொண்டதாகும். விஞ்ஞானம் என்னும் அறிவியலுக்கோ, அதன் கருவி சாதனங்களுக்கோ ஓர் எல்லைக்கு அப்பால் உண்மையை உணர முடிவதில்லை. ஏனெனில் அவற்றிற்கு உணர்வு இல்லை. ஆனால் விஞ்ஞானிக்கு உணர்வு உண்டு. இருந்தும் அவன் அதைப் பயன்படுத்துவதில்லை. அப்படிப் பயன் படுத்தியிருந்தால் அவன் அழிவுப் பாதையில் சென்றிருக்க மாட்டான். இந்த உணர்வையுடைய உடலைச் சாதகமாக வைத்து உண்மையை, அதன் ஆனந்தத்தை உணர்வதற்கு மெய்ஞ்ஞானம் ஒன்றாற்றான் முடியும். ஒரு சிலவற்றை உணர்ந்து அநுபவிக்க முடியுமே அல்லால் அவற்றை அறிவின் துணை கொண்டு ஆராய்ந்து அறிதல் முடியாத காரியமாகும். இதற்கு எடுத்துக்காட்டாக பாமரமக்கள் மத்தியில் ஒரு கதையுண்டு.

ஒருவனுக்கு அவன் உள்ளத்தில் "கடவுள் என்றால் என்ன?" என்று ஒரு வினா எழுந்ததாம். அதனால் அவன் பலரிடமும் சென்று "கடவுள் என்றால் என்ன?, அது எங்கே இருக்கிறது? அதைக் காட்டுவாயா?" என்றெல்லாம் பல கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால் அவனின் கேள்விகளுக்கு ஒருவராலும் தகுந்த பதில் சொல்ல முடியவில்லை. ஒரு நாள் அவன் ஒரு கடை வாசலில் வந்து நின்றபொழுது கடைக்கு வந்த பலர் அது இருக்கிறதா? இது இருக்கிறதா? என்று கேட்பதையும், கடை உரிமையாளன் ஆம், இல்லை என்று சொல்லிச் சிலர் கேட்கும் பொருள்களை அவர்களிடம் எடுத்துக் கொடுப்பதையும் அவதானித்த பின் கடை உரிமையாளனிடம் கடவுள் இருக்கிறதா? என்று கேட்டான். கடை உரிமையாளனோ கடவுளை நம்புகிறவன். கடவுளை நம்பியே கடை நடத்துகிறவன். ஆதலால் கடவுள் இருக்கிறார் என்று பதில் கூறிவிட்டான். இதுவரை ஒருவரும் கூறாத பதிலைக் கேட்ட அந்த மனிதன் வியப்பும் ஆனந்தமும் அடைந்து அது எங்கே இருக்கிறது? என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டான். இந்த இரண்டாவது கேள்வியை எதிர்பாராத அந்தக் கடைக்காரன் திகைப்படைந்தான். இருந்தாலும் தன்னைச் சுதாரித்துக்கொண்டு, எல்லாமாய் இருக்கும் பரம்பொருள் எதில் இருக்கமாட்டாது என்ற நம்பிக்கையில் தனக்கு முன்னாலிருந்த மூடையைச் சுட்டிக் காட்டி இதில் இருக்கிறது என்று கூறிவிட்டு தனது வியாபாரத்தில் ஈடுபட்டான். அப்போது கடைக்காரன் சுட்டிக்காட்டிய அந்த மூடையை

அம்மனிதன் முழு நம்பிக்கையோடு ஆராய்ந்தபொழுது மூடையில் வெங்காயம் இருப்பதைக் கண்டான். அதில் ஒரு வெங்காயத்தை எடுத்து, அதில் கடவுளைத் தேடி உரித்தபொழுது அது சருகாய், தோலாய், சதையாய், முளையாய் எல்லாம் இருப்பதையும் முளைக்கு அப்பால் ஒன்றும் இல்லாமல் இருப்பதையும் ஆனால் அதன் வாசனையோ அதனை உரித்த தன் உடம்பில் வீசுவதையும் கண்ட அந்த மனிதன் வாசனையின் சாராம்சத்தின் தோற்றமே வெங்காயமாக உருவெடுத்திருக்கிறது என்று உணர்ந்துகொண்டான். முளைவரை ஆராய்ந்த தனது அறிவு அதற்கு அப்பால் ஒன்றும் இல்லை என்ற எல்லைவரை வந்து நின்றுவிட்டதையும், அதற்கு அப்பால் அறிவால் என்னவென்று ஆராய்ந்து அறிய முடியாத நுண்பொருளாகிய வாசனையைத் தனது உணர்வு உணர்ந்ததையும் கண்டு தானும், தான் வாழும் உலகமும் அறிவால் மட்டும் ஆராய்ந்து அறிந்துகொள்ள முடியாத மூல சாராம்சத்தின் தோற்றமென்றும், அது யாவற்றையும் கடந்தும் யாவற்றின் உள்ளும் இருப்பதால் அது கடவுளாக இருப்பதையும் உணர்ந்து கண்டுகொண்டான். எனவே அறிவின் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட இத்தகையவற்றை நாம் நமது அறிவின் துணை கொண்டு மட்டும் ஆராய்ந்துகொண்டு போனால் வெங்காயம் என்பது தோலைத்தவிர வேறு அல்ல என்ற முடிவிற்குத்தான் வரமுடியும்.

தொடரும்.


# STATION SUPER STORE

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான மளிகைப் பொருட்களுக்கும்
பத்திரிகைகள் சஞ்சிகைகள்
ஆகியவற்றுக்கு மனநிறைவோடு
ஈஸ்ட்ஹாமில் நீங்கள் நாடவேண்டிய
நம்பிக்கையும் நாணயமும்
நிறைந்த ஸ்தாபனம்

**6 STATION PARADE**
**EAST HAM E6 1JD**
**TEL : 0181 503 4711**


# அருள் விருந்து

**-சுவாமி சித்பவானந்தர்-**

- தெய்வீக உணர்ச்சியால் மேலான வாழ்வு கிடைக்கிறது
- கடவுட் சிந்தனையிருந்தால் பாவம் நுழையாது
- பற்றற்ற நிலையில் பேரின்பம் ஆரம்பிக்கிறது.
- ஒருவனின் ஆசைக்குத்தக்க பந்தமும் இருக்கும்.
- பிறர்க்கு இன்பமுண்டாக்க நமக்கு இன்பமுண்டாகிறது.
- பிரதிபலனை எதிர்பார்க்கும் செயல் துன்பத்தைத் தரும்
- தன்னை அடக்கியவன் பிறரையும் அடக்கியாள்வான்.
- தாயின் அன்புமூலமாகக் கடவுளின் அன்பை அறியலாம்.
- வறுமை என்னும் நோய் வாழ்வைப் பண்படுத்துகிறது.
- சுயநலம் கொண்டவர்களே பிற்போக்குவாதிகள்.
- மனம் அடங்காதவனுக்கு இன்பம் இல்லை.
- இந்திரியங்களுக்கு வசப்படுகிறவன் கீழோனாவான்.
- மனத்தை ஒழுங்குபடுத்துவதால் நல்லவனாகலாம்.
- தூய்மையில் நிலைத்திருப்பதே வாழ்வின் குறிக்கோள்.
- சுயநலத்தினின்றும் விலகியவன் நரகத்தையறியான்.
- கடவுள் தம்மைக் காட்டிக்கொண்டே இருக்கிறார்.
- தனது கோபம் என்றும் தன்னையே கெடுக்கிறது.
- சுயநலத்தை விட்டவன் கடவுளை நேசிக்கிறான்.
- ஆசை ஒழிந்த இடத்தில் நரகவேதனை இல்லை.
- அன்பும், அநுதாபமும் மனிதனின் சாதனைகளுள் சிறந்தவை.
- துக்கத்தைச் சகிப்பவன் அதனை வென்றவனாகிறான்.
- கோழை சாபம் என்பதை, வீரன் ஆசீர்வாதம் என்கிறான்.

தொகுப்பு : ராணி

எமது தொடர் கட்டுரை

# இந்துசமயம்

க. குணரத்தினம்

**சுவாமி விவேகானந்தர் (1863-1902)**

சுவாமி விவேகானந்தர் 12-01-1863 ல் பிறந்தார். பெற்றோர் இவருக்கிட்ட பெயர் நரேந்திரநாத் தத்தா. 1881ம் ஆண்டு நிகழ்ச்சி என்றும் கூறி இராமகிருஷ்ண பரஹம்சரை உதாரணமாக்கினார். ஆசீர்வதிக்கப்பட்ட அம் மனோ நிலையை அனுபவித்தவரென தாம் கண்ட ஒருவர் இராமகிருஷ்ணர் என்றும் அவர்களும் நேரே போய்ப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம் என்றும் மாணவரிடம் கூறினார்.

டிசெம்பர் 1881ல் நரேந்திரநாத் தத்தா இராமகிருஷ்ண பரஹம்சரைச் சந்தித்தார். அப்போ இராமகிருஷ்ணருக்கு வயது 45, நரேந்திரநாத்துக்கு 18. நரேந்திரநாத் இராமகிருஷ்ணரிடம் கேட்ட முதற்கேள்வி கடவுளை நீங்கள் கண்டீர்களா? என்பதே. பதில் உடனே வந்தது.



கல்கத்தாவில் கலைப்பட்ட வகுப்பில் இருந்தபோது ஆங்கிலப் பேராசிரியர் வில்லியம் ஹேஷ்ரி என்பவர் தன்னை மறந்திருக்கும் நிலை என்பதனை விளக்கினார். அத்தகைய அனுபவம் மனத்தூய்மையாலும் குறிப்பிட்ட ஒரு பொருளின்மீது மனதை ஒருமுனைப்படுத்தல் மூலமே ஏற்படுவது என்றும் மிகவும் அரிதான ஒரு

"கடவுளை நான் கண்டது மாத்திரமல்ல, அவரை உனக்கும் காண்பிப்பேன் . உன்னைக் காண்பதிலும் பார்க்க ஆழமாக அவரை நான் காண்கிறேன்" என்றார். நரேந்திரநாத் தமது பல சந்தேகங்களுக்கு விளக்கங்கள் கேட்டுத் திருப்திப்பட்டார். இராமகிருஷ்ணரின் ஆன்மீகம் இவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது. இவரின் வாழ்வே முற்றிலும் மாற்றமடைந்தது.

நரேந்திரநாத் குருவிடம் சரணாகதியடைந்தார்.
16-08-1886ல் இராமகிருஷ்ணர் இறந்தார்.
அப்போது அவரின் வயது 50. நரேந்திரநாத்தின் வயது 23. பரஹம்சரின் சீடர்களாக இருந்த 16 பேர் தங்க இடம் இல்லாமல் தவித்தனர். சுரேந்திரநாத் மித்ரா என்ற அன்பர் ஒருவர் உதவியாலும் நரேந்திரநாத்தின் முயற்சியாலும் 19-10-86ல் பிறங்கோர் என்னும் இடத்தில் ஒரு வாடகைக்கட்டடத்தில் மடம் ஆரம்பிக்கப்பட்டது. சீடர்கள் தமது வாழ்க்கையை ஆன்மீக ஆய்வு கூடமாக்கினர். கடுமையான ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்தனர். காலை 3 மணி தொடக்கம் மாலை 4, 5.00 மணிவரை குருவழிபாடு ஜபம் தியானம் செய்தார்கள். சாஷி என்பவர் மடத்துக்குரிய தேவைகளை யாசித்துப் பெற்று தாய்போல எல்லோரையும் கவனித்து வந்தார். சில நாட்களில் உண்ண உணவே இருக்கவில்லை.

தியானம், சமயப் பயிற்சிகள் என ஒரு பலமான அலையில் மிதந்து கொண்டிருந்தார். வாசித்தல் , ஓதல் கலந்துரையாடல் , சங்கீதம் நடனம் என 24 மணி நேரமும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேல் நாட்டுத் தத்துவஞானிகளின் நூல்கள் ஆராய்ந்து விமர்சிக்கப்பட்டன. இந்து சமய தத்துவங்கள் பற்றியும் ஆராய்ந்தனர்.விவிலிய நூல் , பௌத்தநூல்கள் , நாத்திகம், சமூகவியல் , கலை, விஞ்ஞானம் என பலவும் அவர்கள் கவனத்தை ஈர்த்தன. பெற்றோர்களும் பண்டிதர்களும் மட வாழ்க்கையிலிருந்து மீட்டுப்போக பல முயற்சிகள் எடுத்தும் பயனளிக்கவில்லை.

அகபுற வாழ்வில் எதிர்ப்படக்கூடிய தாக்கங்களைத் தாங்கும் ஒழுக்கத்தை விருத்தி செய்தனர். உண்மை யான அர்ப்பணத்துடன் அக ஆராய்வு செய்தனர். தமது ஆன்மீகப் பயணத்தில் தாண்டமுடியாத தடைகள் எனக் கருதப்பட்டவற்றிலிருந்து வெற்றிபெற எல்லாமுயற்சிகளும் எடுத்தனர். இத்தகைய அர்ப்பணிப்பு, சுதந்திரம், உள்ளொளி என்பன பெற உள்ளூரதிடமான நம்பிக்கையைத் தோற்றுவித்தது. வாழ்க்கையின் உண்மையான நிறைவு ஆன்மீக அனுபவத்தின் மூலமே கிடைக்கும் என்பதனை உணர்ந்தனர். சிறந்த ஒழுக்கம் வாழ்வில் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய அரிய சொத்து. உயரிய ஒழுக்கத்தின் பலத்தினால் வாழ்க்கையில் பல வெற்றிகளை அடைய முடியும் தமது உள்ளுணர்வு உள்ளொளி மூலம் தெரிந்து கொண்டனர். மக்களின் அகவாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதின் மூலம் வாழ்வின் பல கட்டங்களிலும் அவர்கள் முன்னேறலாம் என உணர்ந்தனர். ஆன்மீக மாற்றமேற்படாமல் மக்கள் உண்மையான முன்னேற்றமடைய முடியாது என்பது அவர்களுக்குத் தெளிவாகப் புலப்பட்டது. மக்கள் சேவைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் நோக்குடன் காவி உடை தரித்து துறவிகளானார்கள். இராமகிருஷ்ண சகோதரத்துவம் தோன்றியது. நரேந்திரநாத் விவேகானந்தனானார்.
உலக அரங்கில் அவர் தோற்றமுன் ஏழு வருடங்களாக தம்மைத் தயார் செய்து கொண்டார்.
1983 மே மாதம் அமெரிக்காவில் நடைபெறவிருந்த மதங்களின் உலகப் பாராளுமன்றத்தில் கலந்து கொள்ள கப்பலேறினார். தமிழ் நாட்டிலுள்ள ஒரு சிலரே தமக்கு ஊக்கமும் நிதியும் அளித்து உதவினர் என்று அவரே கூறினார். தன்னந் தனியாக ஒரு சிறிய பணத்துடன் அன்னிய நாட்டில் அடிஎடுத்து வைத்தவர் பல இன்னல்களை எதிர் நோக்கவேண்டியிருந்தது. குளிர்காலம் தகுந்த உடுப்பு இல்லை. மதப் பாராளுமன்றம் தொடங்க ஒரு சில மாதங்கள் இருந்தன. அமெரிக்கக் குடும்பம் ஒன்று எதிர் பாராதவிதமாக அறிமுகமாகி உதவியது. பாராளுமன்றத்தில் உரையாற்றவும் அழைக்கப்பட்டார். முதல் நாள் நிகழ்ச்சியில் 7000 மக்கள் கலந்து கொண்டனர். அன்று அவர் ஐந்தாவது பேச்சாளர். அவரை அறிமுகம் செய்த பேராசிரியர் இறைற் சுவாம் உங்களது தராதரங்களை கேட்பதாவது சூரியனைப் பார்த்து அது பிரகாசிப்பதற்கு என்ன உரித்துடையது என்று மேட்பது போலாகும். என்று கூறி அமர்ந்தார். அமெரிக்காவின் சகோதர சகோதரிகளே! என்று விவேகானந்தர் ஆரம்பித்தார். மண்டபமே அதிர அங்கிருந்த 7000 மக்களும் எழுந்து நீண்டநேரம் கரகோஷம் செய்தனர். சிக்காகோ நகரில் அவர் நிகழ்த்திய் உரை உலகப் பிரசித்தியானது. அதன் பின்னர் மகாநாடு நிகழ்ச்சிகளின்போது மக்கள் கலைந்து போவதை தடுப்பதற்கு இறுதியாக சுவாமி விவேகானந்தா உரையாற்றுவார் என்று தலைவர் அறிவிப்பார். மக்களும் சந்தோஷமாக எதிர் பார்ப்புடன் காத்திருந்து கேட்டனர். விவேகானந்தரின் உலகப்பணி ஆரம்பித்தது.
விவேகானந்தர் இந்து சமயத்தை ஒரு உலக சமயம் என்று அறிமுகப் படுத்தினார். எல்லா சமயங்களும் உண்மையானவை ஆனால் இந்து சமயம்

தொன்மையானது பெருமையுள்ளது எல்லா சமயங்களுக்கும் தாயானது என்று கூறினார். அத்வைத வேதாந்த தத்துவத்தை தமது உரையில் விளக்கினார். ஆன்மீகம் சம்பந்தமாக இந்தியா வழிகாட்டியாக உள்ளது என்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு மேல்நாடுகள் வழிகாட்டியாக உள்ளன என்ற கருத்தை வெளியிட்டார். மேலைத்தேய விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவதன் மூலம் இந்தியா சுபீட்சமடைய முடியும் என்று நம்பினார். அமெரிக்காவில் பல இடங்களிலும் சென்று உரையாற்றினார். மக்கள் பெருந்திரளாக அவர் உரையைக் கேட்கக்கூடியதுமல்லாமல் அவர் கருத்துக்களை மனதார ஏற்றுக் கொண்டனர். பெரிய நகரங்களிலெல்லாம் வேதாந்த சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. நான்கு வருடங்கள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் உரை நிகழ்த்தினார். அன்னை பெசன்ற் அம்மையார் விவேகானந்தரைப் பற்றிக் குறிப்பிடும்போது துறவி என்று அவரை அழைக்கிறார்கள் ஆனால் அவர் போர்வீரரான துறவி. குறிக்கோளுடனும் ஆண்மையுடனும் திடமாகவும் மனிதருள் பெருமனிதராய் உயர்ந்து நிற்கிறார். கௌரவம் ,பெறுமதி , அதிகாரம் எல்லாம் அவரிடம் இருந்தன. ஆனால் அவரின் ஆன்மீகச் செய்தியின் மிக நேர்த்தியான அழகு அவற்றையெல்லாம் விஞ்சிவிட்டது என்கிறார். தென்கிழக்கு ஆசியாவிலும் சீனாவிலும் இந்து சமயம் பௌத்தம் என்பவற்றை இந்து மத போதகர்கள் சென்று பரப்பிய பின் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவுக்கு வெளியே இந்து சமயத்தின் ஒளியை பரப்பிய முதல் இந்திய மத ஆசிரியர் விவேகானந்தராவார். 700 ஆண்டுகளாக முஸ்லீம் கிறித்துவ பிரசாரங்களுக்கு உட்படுத்தப்பட்டு வந்த இந்து சமயம் எதிரிகளின் நாடுகளிலேயே எதிர்ப்பிரசாரம் செய்ய ஆரம்பித்தது. தத்துவரீதியாக எதிர்த்து நிற்கக்கூடியதுமல்லாமல் வெளிநாட்டவர் இந்து சமயத்தையேற்று மதம் மாறும் நிலையும் ஏற்பட்டது. (இன்னும் வரும்......)

6 Kumars MINI SUPERMARKET

இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட உணவுப் பண்டங்கள்
கடல் உணவுப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள் Rice cookers
சஞ்சிகைகள் Audio, CD கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம் 6 Kumars

புடவைத் தேவைகளுக்கு எமது மற்றுமோர் ஸ்தாபனம்

Vashtraa Silk



எம்மிடம் திருமண கூறைப்புடவைகள் மற்றும்
சகலவிதமான புதியரக புடவைகள்
பாவாடைகள், நகைகள், பரதநாட்டிய நகைகள்
ஆண்களுக்கான பட்டு வேட்டி , சங்குமாக் சாரங்கள்
மணமகனுக்குத் தேவையான சர்வாணி, குருத்தா, தலைப்பாகை
(விற்பனைக்கும் வாடகைக்கும்) சிறுவர்களுக்கான றெடிமேற் ஆடைகள்

285, 287 High Street, Manor Park London E 12 6SL
Tel / Fax : 0181 471 5712, 0181 471 3707

# என் கடன் பணி செய்து கிடப்பதே

## வித்துவான் க.ந.வேலன் பி எச் டி

என் கடன் பணி செய்து கிடப்பதே என்று பாடிய அப்பர் பெருமான் உழவாரத் திருத்தொண்டு புரிந்து கிடந்தவர்.

மக்கள், வாழ்க்கையை நடத்துவதற்காகப் பல வித தொழில்களைப் புரிகின்றார்கள். தொழில்கள் எல்லாம் பயன் கருதிச் செய்யப்படுவன. பயன் கருதாப் பணியே தொண்டு எனப்படும். எனவே தொழில் வேறு, தொண்டு வேறு. பயன் கருதித் தொண்டு செய்வது தவறல்ல, ஆனால் அதனால் நன்மையும் தீமையும் விளையும். இவையே புண்ணியமும் பாவமுமாகச் செய்தவனைச் சென்று சேரும். எனவே பயன் கருதிச் செய்யும் வினை ஒருவனைப் பிறவி எடுக்கச் செய்யும். இவர்களே பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றவர்கள்.

அப்படியானால், பிறவித் துன்பத்திலிருந்து விடுபட வழியென்ன? என்னும் சிந்தனை தோன்றுகிறது. அந்த வழியைத்தான் அப்பர் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று கூறுகிறார். பயன் கருதாது பணி செய்யும்போது, நன்மை தீமைகளும் அவற்றின் விளைவாகிய புண்ணிய பாவமும் அவனை (பணிசெய்வானை) பாதிப்பதில்லை. வினை இல்லையாகி விடுவதால், வினைப் பயனை அநுபவிப்பதற்காக உடம்பெடும் பிறவியும் இல்லையாகி விடுகின்றது. மாறாக இருவினை ஒப்பு ஏற்பட்டு, மலம் பரிபாகம் பிறந்து, அதன் விளைவாகத் திருவருட்பதிவாகிய சத்தி நிபாதம் ஏற்படும். சத்தி நிபாதத்திலே வீடு பேறாகும்.

எனவே பயன் கருதிய தொழிலாகிய காமிய கர்மம், ஆன்மாவைப் பந்தித்துப் பிறவிப்படுத்தலையும், பயன் கருதாப் பணியாகிய நிஷ்காமிய கர்மம், ஆன்மாவைப் பந்திக்காது ஆன்மாவுக்கு விடுதலை தருதலையும் காண்கிறோம்.

இங்கு பணி என்று அப்பர் கூறுவது நிஷ்காமிய கர்மத்தினை ஆகும். எனவே நாம் செய்வது காமிய கர்மமாகிய தொழில் ஆகும்.

ஐந்தெழுத்து மந்திரமாகிய "சிவாயநம" என்பதும் இதனையே உணர்த்துகின்றது. ஆன்மாவைக் குறிக்கும் "ய"கரம் நடுவே நிற்கின்றது. அது "ந" கரமாகிய திரோதான சத்தியால் உந்தப்பெற்று "ம" கரமாகிய மலத்தோடு கூடிப் பிறவிக்கு ஏதுவான காமிய கர்மம் எனப்படுகின்ற தொழில் புரிந்து ஊன நடனம் ஆடலாம். அதுபோல "வ" கரமாகிய சிற்சத்தியால் உந்தப்பெற்றுச் "சி" கரமாகிய சிவத்தோடு கூடிப் பிறவாமைக்கு ஏதுவாகிய நிஷ்காமியம் எனப்படும் பணி (தொண்டு) புரிந்து ஞான நடனமும் ஆடலாம். அப்பர் போன்ற ஞானிகள் இவ்வுலகில் நடத்திய வாழ்க்கை ஞானவாழ்க்கை எனப்படும் ஞான நடனம் ஆகும் என்பதை அவர்தம் வாழ்வால் உணர்கிறோம். அப்பர் அதனையே பணி என்று கூறினார்.

உழவாரப் பணி புரியும்போது, உழவாரம் செதுக்கிய மண்ணில் சாதாரண கற்களுக்குப் பதிலாக மாணிக்கக் கற்கள் தோன்றின என்றும், அவற்றையும் அந்த ஞானி சாதாரண கற்களைப் போல எடுத்துத் தூர வீசினார் என்றும் அறிகிறோம். இருவினை எனப்படுகின்ற நன்மையும் தீமையும் ஒருவனைப் பிறவிப்படுத்தும் என்னும் உணர்வு தோன்றி இருந்தமையினாலேயே, அப்பர் ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் தன்மையினைப் பெற்றிருந்தார். அவர் அடைந்திருந்த பெருநிலையை, அவருடைய ஞான வரலாற்றைப் பாடிய சேக்கிழார் பெருமான் " ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" என்றும், இறைவனை அவர் வணங்குவதுகூடத் தமக்கு ஒரு பொருளை வேண்டியன்று என்றும் கூறுவார். அப்படியாயின் அவர் கயிலைக் காட்சி காண என்பு தேயச் சென்றது எதற்காக, வீடு பேறு வேண்டித்தானே என்று கேட்பார்க்கு, அவர், வீடு பேற்றையும் வேண்டவில்லை என்றும், "வீடும் 'வேண்டா விறலின் விளங்கினார்" என்றும் கூறுவார். "அது சரி, அப்படியானால்

எதற்காகத்தான் கும்பிட்டார்? ஒரு காரணம் இருக்கவேண்டுமே!" என்று மீண்டும் வினவுவார்க்கு கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்று காரணம் கூறுவார்.

தமக்கு இறைவனிடமுள்ள அன்பு காரணமாகக் கும்பிட்டாரேயன்றி, கும்பிடாமல் இருக்கமுடியாத ஆதங்கத்தால் கும்பிட்டாரேயன்றி இறைவனுடைய அன்பு வேண்டியன்று, வீடுபேறு வேண்டியன்று. ஏனெனில் வேண்டத்தக்கது அறிவோன் அவன். என் கடன் பணி செய்தலேயன்றி வேறொன்றுமல்ல. இங்ஙனம் எதையும் எதிர்பாராத ஆன்ம வீரமே விறல் எனப்படும். அதனையே வீடும் வேண்டா விறலின் விளங்கினார் எனக் கூறினார்.

ஞானிகளிடம் உள்ள ஞானச் செருக்கால் வருவதே இந்த வேண்டாமை என்னும் விறல் ஆகும். "விறல் என்னும் வேண்டாமை என்னும் செருக்கு" என்று இதனையே வள்ளுவர் கூறினார்.

இந்தச் செருக்கு அஞ்ஞானத்தின் விளைவல்ல, ஞானத்தின் விளைவாகும். அதனால் இந்தச் செருக்கைச் "சாத்துவிக அகங்காரம்" என்று சைவ சித்தாந்தம் கூறும்.

இந்த ஞானவீறுதான், சமணராலும் பல்லவ வேந்தனாலும் அவருக்கேற்பட்ட இன்னல்களிலிருந்து அவரைத் தப்பிப் பிழைக்க வைத்தது. சீவனாக வாழ்ந்து, சீவன்முத்தராக, ஆன்மீக உயர்வு பெற்ற அப்பர் ஆற்றிய பணி செயலிற் செயலின்மை எனப் பகவத்கீதை கூறுகின்ற பற்றற்ற பணியாகும்.

இன்று பயன்கருதி, தன்னலம் கருதிச் செய்யும் ஏமாற்றுவேலைகளையும் தொண்டு என்று பெயரிட்டு அழைக்கக் காண்கிறோம். எனவே தொழில் இது, தொண்டு இது என்னும் வேறுபாடு உணர்ந்து, காமியத் தொழில் செய்து களைப்படைந்து, நிஷ்காமியத் தொண்டுபுரிந்து நிமலன் கழல் அடைய முயல்வோம்.

தமிழ் திரைப்படங்கள் வாடகைக்கும் விற்பனைக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

2000 இற்கும் அதிகமான தெரிவுகள்
**Audio cassettes from £1.50 to £2.00**
புதிய பழைய திரைப்படப் பாடல்கள்
பட்டிமன்றம்-நாதஸ்வரம்

தமிழ்த்திரைப்பாடல்கள் அடங்கிய 3Hrs video cassettes from £3.50 மட்டுமே

ஆலயங்களுக்குத் தேவையான பொருட்கள். திருமணம் மற்றும் விசேடங்களுக்குத் தேவையான பொருட்கள்.

# VANEE AGENCY
## -SINCE 1979
ஐரோப்பாவில் முதலாவது தமிழ்க்கடை

அன்பளிப்புப் பொருட்கள் குத்துவிளக்கு, நிறைகுடம் சுவாமிப்படங்கள், சிலைகள்

யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடுகள் அரிச்சுவடிகள் ஈழத்து இந்திய தமிழ்நூல்கள்

**317 High street North,
Manor park
London E12, 6PH
Tel: 0181 552 9419
Fax: 0181 514 3383**

**Video catering for any function. Chairs available for rent**

# ஆத்மீக உரையாளர் சிவஅன்புடன் ஒரு சந்திப்பு.

## நான்

*கலசம் பத்திரிகையின் சார்பாக தங்களைச் சில கேள்விகள் கேட்க உள்ளோம். முக்கியமான கேள்விகள் கேட்கமுன்னர் கலசம் பத்திரிகை பற்றிய ஒரு கேள்வியை முதலிற் கேட்க விரும்புகிறோம். இந்தக் கலசம் பத்திரிகை வெளி நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த மக்களுக்காகப் புலம்பெயர்ந்த மக்களால் நடத்தப்படும் ஓர் ஆத்மீக சஞ்சிகை. பல கஷ்டங்களுக் கிடையேயும் வெற்றிகரமாக வெளிவரும் எமது சஞ்சிகைபற்றி தங்கள் கருத்து என்ன?*

## அவர்

கலசம் பத்திரிகையை நான் பார்த்தேன். சிறப்பான ஓர் ஆன்மீகப் பணியை ஒரு வெளி நாட்டிலே இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் சிறப்பாகச் செய்வதையிட்டு மிகவும் பெருமையாக இருக்கிறது. இந்த நாட்டிலே உலகியலிலே மக்கள் சிக்கி அவசர வாழ்க்கை வாழ்ந்துகொண்டு இருக்கிற காலகட்டத்தில் இப்பேர்ப்பட்ட ஒரு முயற்சி மிகவும் பாராட்டத் தக்கது. இது சாதாரணமாக வாசித்துவிட்டுத் தூக்கி வீசுகிற பத்திரிகை போல அல்லாமல் சாதாரணப் பத்திரிகைகளிலிருந்து சிறிது வேறுபட்டு குறிப்பெடுத்து வைக்கவும் அவ்வப்போது பார்க்கவும் தேவையான விஷயங்களை அடக்கிய பத்திரிகையாக இருக்கிறது. இதை எல்லா நாட்டவர்களும் ஆத்மீக அன்பர்களும் வரவேற்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

## நான்

*தங்கள் கருத்துக்கு நன்றி. இந்தப் பத்திரிகையில் முன்னேற்றமாகச் செய்வதற்கு சேர்க்கவேண்டியவை, மாற்றவேண்டியவை ஏதாவது இருந்தால் சொல்வீர்களா?*

பெரியபுராணத்தில் உள்ள நாயன்மார்கள் வரலாறுகளை, ஆழ்வார்கள் வரலாறுகளை பின்னொரு காலத்தில் புத்தகமாகக் கட்டிவைக்கக்கூடிய பாணியில் தொடர் கட்டுரைகளாக எழுதினால் நன்றாக இருக்கும். இங்குள்ள மக்கள் இப்படியான புத்தகங்கள் இங்கு கிடைப்பதில்லை என்கிறார்கள். அதை இப்படிப்பட்ட புத்தகங்கள் நிவர்த்தி செய்யும்.

## நான்

*அதிலே ஒரு சங்கடம் இருக்கிறது. நாங்கள் இந்தப் புத்தகத்தை புதிய தலைமுறைக்கான தேவை கருதி வெளியிடுகிறோம். புலம்பெயர்ந்த மக்களின் பிள்ளைகள் சமயம் பற்றித் தெரிந்துகொள்ளாமல் அந்நிய நாட்டு மோகத்திலே சிக்கி அவர்கள் சமயமுமில்லாமல் எங்கள் சமயமுமில்லாமல் இடையிலே வாழப்போகிறார்கள். அப்படி ஒரு நிலை வராமல் அடுத்த சந்ததிக்கு உதவவேண்டும் என்ற கருத்திலேதான் இதை வெளியிடுகிறோம். தாங்கள் சொன்னது போலக் கட்டுரைகள் வெளியிடுவதற்கு இந்த நாட்டில் மிகுந்த வசதிகள் உண்டு. ஆனால் நாங்கள் எங்கள் சிறுவர்களுக்குத்தான் முதலில் ஆத்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்று விரும்புகிறோம்.*

## அவர்

அவர்கள் பயன்படவேண்டும் என்று நீங்கள் நினைப்பது சரி. அவர்களுக்குக் கவர்ச்சியாக எழுதவேண்டும். அதேவேளை வரலாறுகளைப் பழமை என்று ஒதுக்கிவிடாதபடி பார்க்கவேண்டும்.

## நான்

*நாங்கள் பழமையென்று எதையும் ஒதுக்கவில்லை. பெரியபுராணம் போன்ற நூல்களைத் தமிழ்நாட்டிலிருந்து எடுக்கமுடியும். ஆனால் புலம்பெயர்ந்து வாழும் தமிழனின் பிள்ளை வாசிக்கப் பொருத்தமான சமய நூல் எந்த நாட்டிலும் இல்லையென்றே நினைக்கிறோம். அவற்றை விளங்கிக்கொள்வதும் முடிவதில்லை. எம்மிடம் சந்தா கட்டி இந்தச் சஞ்சிகையைப் பெறுவோர் தங்கள் பிள்ளைகள் வாசிக்கக்கூடிய*

*ஆங்கில மொழியில் கட்டுரை வெளியிடும்படி கேட்கிறார்கள். பிள்ளைகளுக்குச் சமய அடிப்படைக் கருத்துகளை முதலில் கொடுத்தால் நாளடைவில் அவர்கள் மேலும் படிக்க விரும்பித் தமிழையும் படிப்பார்கள் என்பது எமது கருத்து. அதனால் ஆங்கிலத்திலே கட்டுரைகளைப் பிரசுரிக்கிறோம். இதுபற்றித் தங்கள் கருத்து என்ன?*

## அவர்

ஆங்கிலத்திலே எழுதுவதாக இருந்தால் எழுதுபவர் ஆங்கிலத்திலே நல்ல வல்லுநர் ஆக இருக்கவேண்டும். தமிழிலும் வடமொழியிலும் உள்ள எங்கள் சமயக் கருத்துகளை நன்றாகப் புரிந்து அப்படியே மாறாமல் ஆங்கிலத்திலே எழுதக்கூடியவராக இருக்க வேண்டும். அதற்கு நல்ல அறிவு வேண்டும். சாதாரண கட்டுரை எழுதுவதுபோல இதை எழுத முடியாது. பெரியவர்கள் எப்படிப்பட்ட ஆங்கிலத்தில் எழுதினாலும் புரிந்துகொள்வார்கள். சிறுவர்களுக்கு அவர்களுக்கு ஏற்றமாதிரி எழுதாவிட்டால் அதனால் பயனில்லை. ஆகவே சிறுவர்களை வசீகரிக்கக் கூடிய விதத்தில் இலகுவான நடையில் எழுதினால் அது நல்லது.

## நான்

*இனி கலசம் வாசகர்களின் கேள்விகளைக் கேட்க விரும்புகிறோம். முதற் கேள்வி, நாம் ஆபத்து வரும்போது ஐயோ, ஐயோ என்று கத்துகிறோம். ஐயோ என்பதன் பொருள் யாது?*

## அவர்

இதற்கு அடியேனுடைய குருநாதர் பல பிரசங்கங்களில் விளக்கம் சொல்லியிருக்கிறார். ஐயோ என்று சொல்லக்கூடாதென்று. காரணம், ஐயோ என்பது யமனுடைய மனைவியின் பெயராம். அடிக்கடி ஐயோ ஐயோ என்று நாம் கூப்பிட்டால் யமனுடைய மனைவிக்கு ஓர் இழுப்புச் சக்தி ஏற்பட்டு யமனுடைய தொடர்பு நமக்குச் சீக்கிரமாக வந்துவிடும் என்று அவர் ஹாஸ்யமாகச் சொல்லி வழுக்கி வீழினும் உன் திருப்பெயரல்லாது வேறொன்றும் நான் கூறக்கூடாது என்று ஞாபகப் படுத்தவேண்டும் என்று சொல்வார்.

## நான்

*இறைவன் திருக்குமாரர்கள், விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் என்னும் நால்வர் என்று கூறப்பட்டிருக்கிறது. பெண் மகவுபற்றிக் கூறப்படவில்லையே! ஏன்?*

## அவர்

வேதாந்தத்திலே இறைவன் ஒருவனே என்ற கருத்துத்தான் நிலவுகிறது. பின்பு சித்தாந்தத்திலே இறைவனுக்கு மூன்று நிலை கூறப்படுகிறது. அதாவது பதி, பசு, பாசம் என்பன அவை. ஆனால் இறுதியில் சித்தாந்தத்திலும் இறைவன் ஒன்று என்றுதான் கூறப்படுகிறது. உலகியலார்க்கு இது எளிதில் புரியும் வண்ணம், சில தத்துவங்களைப் புரிய வைப்பதற்காக எங்கள் மூதாதையர்கள் இப்பேர்ப்பட்ட உலகியல் உறவில் இறைவனுடைய சக்தி வெளிப்பாட்டை வைத்திருக்கிறார்கள். அந்த வரலாற்று ரீதியிலேதான் இந்தத் தோற்றங்கள். இறைவனுக்குப் பிறப்பு இறப்பென்று கிடையாது. ஆனால் அந்தந்த வேளைகளில் சில அநுகூலங்கள் செய்வதற்காக அவன் தோன்றியிருக்கிறான். அதை உதயமாகிறான் என்று சொல்லலாம். முருகோதயம், முருகன் பிறந்தான் என்று சொல்வதில்லை. சூரியன் எப்பொழுதும் இருந்தாலும் பகலிலே தோன்றும்போதுதான் தெரிகிறான். அதுபோலத்தான் புராணங்கள், இதிகாசங்களிலே இறைவன் தோன்றியதாகச் சொல்லப்படுகிறது. மகனாகத் தோன்றியதும் தகப்பனாகத் தோன்றியதும் ஒரே இறைவன்தான். அதைத்தான் கச்சியப்பர், "ஈசனே அவன் ஆடலால் மதலையாகி நின்றான்" என்கிறார். மகன் வேறு, தகப்பன் வேறு இல்லை. தகப்பனும் மகனும் வேறு வேறு என்று நினைத்துத்தான்

சூரபதுமன் அழிந்தான். சூரன் சகல சித்திகளையும் பெற்றவன். முருகன்தான் சிவன், சிவன்தான் முருகன் என்பதை உணராததால் கெட்டவன். மற்ற அசுரர்களைப் போல, பெண்களை மானபங்கப் படுத்தவில்லை. தெய்வம் இல்லையென்று சொல்லவில்லை. இன்னொரு பெண்ணுக்காகப் போர் தொடுக்கவில்லை. இப்படி வேறு துன்பம் எதுவும் செய்யாதவன். சிவபூசையிலே சிறந்தவன். ஆனால் சிவன் வேறு, முருகன் வேறு என்று இறுதிவரை எண்ணிக் கெட்டுப்போனான். பலர் இடித்துச் சொல்லியும் ஆணவத்தினால் அது அவனுக்கு ஏறவில்லை. இறுதியிலேதான் உணருகிறான். அதாவது, இவரைப் பாலன் என்று இருந்தேனே என்று சொல்லி அழுகிறான். பின்பு அவனுடைய மனதுக்குள்ளே மானம் என்று ஒன்று தடுக்கிறது. முருகனுடைய பெயர் நிலைக்கும்வரை என் பெயரும் நிலைக்கும் என்று முடிவுக்கு வருகிறான். ஆனதினாலே இறைவனுடைய மதலைகள், பிள்ளைகள் என்று சொல்லப்படுகின்ற வெளிப்பாடுகள் எல்லாமே இறை சக்திதான். இறை சக்திக்கு ஆண் என்றோ பெண்


என்றோ பேதம் கிடையாது என்பது எங்களுடைய வேதாகமங்களிலே கூறப்பட்டிருக்கிறது. அதை எங்களுக்குப் புரிய வைப்பதற்காக ஆண் என்றும் பெண் என்றும் தந்தையென்றும் தாயென்றும் குழந்தையென்றும் தோழனென்றும் பல நிலையிலே இறைவனை வைத்திருக்கிறார்கள்.

## நான்

***இங்குள்ள முருகன் ஆலயத்திலே திருவிழா, விசேட வழிபாடுகளில் முருகன் பெயரிலே உள்ள அருட்பாடல்களைப் பாடாது தேவார திருவாசகங்களைப் பாடுவது தனக்கு மன வருத்தத்தைத் தருகிறது என்று எமது வாசக அன்பர் ஒருவர் எழுதி அதற்கு விளக்கம் தரும்படி எங்களைக் கேட்டிருக்கிறார். பதில் கூறுங்கள்.***

## அவர்


நான் முதலில் சொன்ன பதிலில் இதற்கான விடை இருக்கவேண்டும். ஆலயங்கள் எல்லாம் வேத சிவாகம முறைப்படி அமைக்கப்பட வேண்டியவை. பூசைகளிலே சில ஒழுங்குகளை வைத்திருக்கிறார்கள். குருக்கள் திராவிட தோத்திரம் அல்லது பஞ்சபுராணம் பாடச் சொன்னதும் அதைத்தான் பாடுகிறார்கள். திருமுறைகள் பன்னிரண்டிலே தெரிந்தெடுத்து ஐந்து திருப்பாடல்களைப் பாடுகிறார்கள். அதாவது, தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லா ண்டு, திருப்புராணம் என்று வரிசையாகப் பாடப்படவேண்டும். அதன் பின் அருணகிரியாருடைய திருப்புகழைக் குறிப்பாகப் பாடுவார்கள். எல்லாக் கோயில்களிலும் இதைத்தான் பாடுவார்கள். ஆனால் எமக்கு இஷ்டதெய்வம் என்று வரும்பொழுது நாங்கள் அந்தந்தத் தெய்வத்துக்குரிய, நமக்குப் பிடித்த அருட்பாடல்களைப் பாடலாம். பக்தி அன்போடு பின்னிப் பிணைந்து இருக்கவேண்டுமே தவிர பக்தி வெறியாக மாறிவிடக்கூடாது. வெறியாக வரும்போதுதான் இப்படிப்பட்ட பிணக்குகள் ஏற்படும். நான் என்னுடைய இஷ்ட தெய்வத்துக்கு ரிய பாட்டுத்தான் பாடுவேன் என்று நினைத்துப் பாடுவது ஏமாற்றுவதாக இருக்கும்.



## குறித்து வைக்கவேண்டிய தினங்கள்

11-08-96 பிரதோஷவிரதம்
13-08-96 ஆடி அமாவாசை
17-08-96 ஆவணி மாதப் பிறப்பு
18-08-96 நாக சதுர்த்தி விரதம்
19-08-96 கருட பஞ்சமி
20-08-96 ஷஷ்டி விரதம்
24-08-96 ஆவணி மூலம்
25-08-96 ஏகாதசி விரதம்
01-09-96 சங்கட ஹர கணபதிவிரதம்
03-09-96 கார்த்திகை விரதம்
04-09-96 ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி
08-09-96 ஏகாதசி விரதம்
10-09-96 பிரதோஷவிரதம்
12-09-96 அமாவாசை விரதம்
15-09-96 ஆவணி ஞாயிறு
16-09-96 விநாயக சதுர்த்தி விரதம்
17-09-96 புரட்டாதி மாதப்பிறப்பு
18-09-96 ஷஷ்டி விரதம்
21-09-96 புரட்டாதிச் சனி
23-09-96 பரிவர்த்தன ஏகாதசி விரதம்
24-09-96 பிரதோஷ விரதம்
25-09-96 நடேஷரபிஷேகம்
26-09-96 பூரணை விரதம்
27-09-96 மஹாளய ப்ரம்பம்
28-09-96 புரட்டாதிச் சனி
01-10-96 கார்த்திகை விரதம்
02-10-96 கபில ஷஷ்டி
05-10-96 புரட்டாதிச் சனி
08-10-96 ஏகாதசி விரதம்
10-10-96 பிரதோஷவிரதம்
11-10-96 கேதாரேஸ்வர விரதம்
12-10-96 அமாவாசை
13-10-96 நவராத்திரி விரதாரம்பம்
16-10-96 சதுர்த்தி விரதம்
17-10-96 ஐப்பசி மாதப் பிறப்பு
18-10-96 ஷஷ்டி விரதம், சரஸ்வதி பூசை
20-10-96 மஹாலஷ்மி விரதம்
21-10-96 கேதார கௌரி விரதாரம்பம்
22-10-96 ஏகாதசி விரதம்
24-10-96 பிரதோஷவிரதம்
25-10-96 ஐப்பசி வெள்ளி விரதம்
26-10-96 பூரணை விரதம்
28-10-96 கார்த்திகை விரதம்
01-11-96 ஐப்பசி வெள்ளி
07-11-96 ஏகாசசி விரதம்
08-11-96 பிரதோஷ விரதம்
09-11-96 நாக சதுர்த்தசி ஸ்நானம்
10-11-96 தீபாவளி

தொகுப்பு : அமுதா



*ஆக்கையாற் பயனென் - அரன்*
*கோவில் வலம் வந்து*
*பூக்கையாலட்டிப் போற்றி என்னாதவிவ்*
*வாக்கையாற் பயனென்*

என்று பாடினார் திருநாவுக்கரசு நாயனார். எமது மனிதப் பிறவியின் பூரணத்துவத்தை அடைவதற்கு இறைவழிபாடு மிக முக்கியம். அதனாலேதான் தமிழ் மூதாட்டி ஔவை கூறினார் "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்". இந்த முதுமொழி எம் மதத்தவர் அனைவரும் போற்றவேண்டிய பொன்மொழி அந்த வகையிலே வவுனியாவிலே இயற்கை எழில் வளம் நிறைந்த "கோவில் குளம்" பதியிலே அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகவிழா 01-05-1996 இலன்று விண்ணவரும் மண்ணவரும் துதி செய்து போற்ற சிறப்பாக நடந்தேறியது. "அம்மையே அப்பா" என்ற புராண கூற்றிற்கேற்ப இந்த பிரபஞ்சத்தை எல்லாம் கட்டிக் காக்கும் அகிலலோக மாதா பிதாவாகிய "சிவனையும் பார்வதியையும்" பிரதிஸ்டை செய்வித்த வவுனியா கோவில்குளம் வாழ் அனைத்து மக்களும் பிறவிப் பெருங்கடன் தீர்த்துவிட்டனர் என்று கூறுவது சாலப் பொருத்தமாகும். அதைவிடப் பெருமை அந்தக் கிராமத்தின் அழகை மெருகூட்டும் வகையில் திருக் கோவிலின் அழகு மிளிர்வதுதான்.

# வவுனியாவில் ஆன்மீகக் குடமுழுக்கு விழா

**துன்னையூர் ராம்**
**தேவலோகேஸ்வரக் குருக்கள்**

தென்னைமரமும் தலவிருஷங்களும் வீதியைச் சூழ்ந்து பச்சைப்பசேல் எனக் காட்சிதர நடுவே கம்பீரமாக ஆலய அழகுத்தோற்றம் துவிதளம் உடைய மூலஸ்தான தூபியும் (மூன்று தளம்) அகிலாண்டேஸ்வரப் பெருமான் லிங்கவடிவில் மூலமூர்த்தியாய் கருவறையிலிருக்க, தெற்கு முகமாக அகிலாண்டேஸ்வரி சன்னிதானமும் பரிவார மூர்த்திகளாக சிவகாமி அம்மை சமேத நடராஜர், விநாயகர், சுப்பிரமணியர், நவகிரஹம், சந்தான கோபாலர், பைரவர், சண்டேஸ்வரர், நந்தி, பலிபீடம், தம்ப விநாயகர் என அழகாக அமைக்கப்பட்டு இருக்கும். ஆலயங்களுக்கெல்லாம் உயிர்கொடுக்கும் சிற்பங்களும் அதற்கு ஏற்ற அழகும் அமைதியும் கொண்ட மங்கள மஞ்சள் நிறத்தில் வர்ணம் தீட்டப்பட்டிருக்கும் சிறப்பும் காண்போர் அனைவரையும் கவரும் என்பதில் ஐயமில்லை. இந்த ஆலயத்தில் இன்னும் ஒரு சிறப்பு பாணாசுரன் வழிபட்ட பெருமையுடைய பாணலிங்கம் என்று கூறப்படும் அந்த லிங்கங்களிலே தோன்றிய லிங்கமே இங்கும் கருவறையிலே வைத்து வணங்கப்படுகின்றது. காசிஷேத்திரத்திலே இருந்து கொண்டுவரப்பட்டது என்ற சிறப்பும் இந்த லிங்கத்திற்கு உண்டு. சிற்ப வேலைப்பாடுகள் நாவலியூர் சந்திரன் ஆச்சாரி செதுக்கிச் சிறப்பித்தார்.

பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஆனந்தமாய் வழிபட இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த 40 சிவாசாரியார்கள், நயினை "பிரதிஸ்டாபூஷணம்" சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் சிறப்பாக கிரியா நிகழ்வுகளை நெறிப்படுத்தி நடாத்தினார்கள். கும்பாபிஷேக விழா நிறைவுற்றதும் விண்ணவர் எல்லோரும் சேர்ந்து வாழ்த்துவது போல் நிறைவான மழை பெய்து அனைத்து அடியார்களையும் மெய்சிலிர்க்க வைத்தது. அடியார்களுக்கெல்லாம் ஆன்மீக நிறைவு தந்த விழாவாக குடமுழுக்கு விழா அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.





# சிறுவர் கலசம்

The following pages contain features and articles for children and by children. Hence are placed in the middle of the magazine Children can remove those pages and save them and eventually bind them in the form of a booklet. It is our desire to increase the number of pages in children section from eight to twelve. This depends on the enthusiasm the children show.In this special issue we have increased the number of pages to twelve. We wish to know the views of children and parents on this matter.

Editor

# CHANDESWARA NAYANAR



Vichara Sarman (who was later known as Chandesvara Nayanar) was born in Tiruchaijnanallur, which was famous for Vedic recitations, Tapas and Siva Bhakti. He was a prodigy. At the age of five he had learnt the Vedas, and all the Agamas by himself, on account of previous Samskaras. After his Upanayanam (sacred thread ceremony), he learnt the Vedas under a Guru: but the Gurus were wonder struck at the intelligence of the disciple. He wanted to attain Final Emancipation in that birth.

One day Vichara Sarman, with his friends, was walking along a road. He noticed a cowherd severely beating a cow because it had slightly pushed him with its horn. Vichara Sarman could not endure this. He was greatly moved and spoke to the cowherd: "Oh ignorant man! Do you not know that the

cow is worshipful and divine. All the Devas dwell in her. She is indispensable for all religious activities. It is our sacred duty to tend and protect the cows. Whoever harms the cow is hurled into Naraka. Whoever worships the cow wins a place in heaven or Siva's Abode. You have committed a great sin today. Hereafter, you need not tend to the cows: I will do that myself." Vichara Sarman took the work upon himself from that day.


The cows grew healthier. They liked Vichara Sarman very much. The Brahmins who got more milk thereafter were able to fulfil their religious duties very well, and they were pleased with Vichara Sarman. There was so much of surplus milk now, that Vichara Sarman, who loved Lord Siva and His worship, decided to perform Abhishekam for Lord Siva. He used to sit under an Atti tree on the bank of the river, construct a temple from the mud, and also make a mud image of Siva Lingam and offer the milk, to bathe the Lingam. Then he would perform Archana with the Atti flowers. The cows were giving plenty of milk to Vichara Sarman and to the Brahmins.

One day, when Vichara Sarman was doing this Puja, a villager happened to pass by, and he watched all this. He reported the matter to the owners of the cows, and complained that Vichara Sarman was pouring precious milk on the mud and river sand. These Brahmins summoned Vichara Sarman's father, Echhadattan, and passed the complaint on to him in rather strong terms. The father was naturally shocked. He came home, but did not speak to Vichara Sarman. He wanted to find out for himself. So, the next day, he followed Vichara Sarman at a distance without his knowledge. When Vichara Sarman began pouring milk on the improvised Siva Lingam, the father without understanding the boy's wonderful devotion, hit him with a stick. The boy was so much absorbed in his Puja that he did not even feel the pain. Then, the father, getting still more angry, knocked the milk pot down. It was then that Vichara Sarman realised that his father was interfering with his worship and had committed an unpardonable offence against Lord Siva (Siva Aparadham). He at once took a stick and hit his father's leg: by the will of the lord, the stick was transformed into an axe. Again by His will, it killed the father. It was to test the depth of Vichara Sarman's devotion. He was so engrossed in the worship, that he did not mind what had happened and continued his worship.

Lord Siva was immensely pleased with the intensity of Vichara Sarman's devotion and appeared before him, with Parvathi. Vichara Sarman prostrated before the Lord. The Lord embraced Vichara Sarman and fondled him. That very instant, Vichara Sarman attained the divine Form of Lord Siva. The Lord removed a garland from His own neck and put it around Vichara Sarman's. He had attained Saroopya Mukthi (liberation, with the attainment of the form of the Lord). The Lord said: "My child, you cut your own father's leg for My sake. Now I am your Father. You will soon attain Chandikesvarar's Abode. You worshipped Me with food, clothes and flower garlands. In the same manner, you will also be worshipped." The Lord disappeared. Vichara Sarman also went to the Abode of Chandesvarar. No sin attached to him, for having killed his own father, because of his supreme devotion to the Lord. His father, too, because he was killed by such a great devotee of the lord, was purged of the sin of interfering with His worship, and reached the Abode of Lord Siva.

# AVVAI
# அவ்வை
## *The Lord lifted her into the Heavens*

(Picture by: Tharsana Navendran)



There was an old lady in the Tamil land in ancient times who is just referred to as " That Dame" . She was so well known and popular that "AVVAI" just meant this old woman and no one else. We do not even know her proper name. She was a very popular bard who went about the courts of local chieftains singing their praises and befriending them. Legends say that one such chieftain by name Adhikaman once got an amla fruit which had the power of conferring longevity on the eater and knowing that a long life for Avvai would be of immense use for the country, he willingly gave it to her so that she might live long and enrich the world with her songs and services. She ate the fruit offered to her without knowing its value and lived to a very long age, even upto one or two centuries, according to tradition, always befriending the poor, sharing their fortunes, and laying down ethical maxims for mankind to follow and lead a righteous life.

The occasion of her very birth was significant. By a pre-arrangement, her parents had agreed to abandon the baby the very moment of its birth. the mother could not easily wrench herself from the baby. At that time, the baby Avvai comforted her with the words, "The Lord Shiva who brought me forth into this world has not disappeared, oh mother! Even though dire famine stalks the land, the burden of succouring me is His. Do not be afraid to leave me alone". The baby was brought up into womanhood and in course of time attained old age. Although she has always said that the married state is the best, she remained a spinster all her life. In all the numerous legends and tales connected with her life, she is always referred to as the Grandma Avvai.

Early upbringing by a wandering minstrel seems to have given her the wandering and made her a singer and a poet. Her early life had left its impress upon her throughout her life. Though she was respected, feared and courted by royal princes, she always identified herself with the meek and the oppressed. She was ever grateful for the little acts of kindness shown to her by humble people. She thanked her benefactors in song. The moment she sang about any one, all worldly possessions were showered on that person in abundance.

Three incidents stand out in broad relief in the life of Avvai, which reveal her deep trait of godliness and devotion. She was an old woman and this entitled her to certain liberties in society which could not be indulged in by the others. Once while taking part in a social gathering in the precincts of a temple, she squatted on the floor as usual and stretched her legs in front of the deity.

The temple priest naturally got annoyed. " How dare you do this?" he scolded her. " Your old age does not entitle you to take liberties in God's presence. You shall not stretch your legs in the direction of the lord."

Avvai quietly listened to his tirade and, without the least perturbation, replied: " My friend, please excuse this old woman. Show me a direction where the lord is not: I shall stretch my tired limbs that way, without disrespect to God."

The priest felt mollified. For ready wit and quick repartee, there was no equal to her in her days.

Perhaps she had grown a little conceited by her own brilliant genius, quick wit and shrewd sense, before which all had to bow down. We infer that God took upon Himself the duty of teaching her a little humility. Once, while she was wending her way along a lonely path, she saw a jambu tree. Looking up to see if the tree was in fruit, she saw a shepherd boy perched on the branches and coolly eating these fruits. As usual, in her audacious manner, she called, "My little fellow, will you give me a fruit?"

The boy very calmly replied: " Yes, Grandma: But do you want a hot fruit or cold one"? This was something she had not known till then. She was piqued. She felt it beneath her dignity to ask what a hot fruit was. Nevertheless, she said, " Give me a hot fruit." The boy plucked a large ripe fruit and threw it down with a little force, so that the fruit gathered some particles of sand from the earth due to its impact. When Avvai picked up the fruit, she naturally blew on the fruit with her mouth, to remove the particles of sand.

The boy taunted her : "Grandma, blow well, it is a hot fruit and will cool only on blowing."

Avvai was very vexed. She felt humbled. Her countenance fell. " Oh Lord, am I thus to be humbled by a poor shepherd boy?" she cried.

The boy thereupon jumped down and low! there was no boy, but Lord Karthik known as Muruga, with the spear in His hand and His mount, the peacock, in the background. He consoled her with the words, " Grandma, do not fret. We desired to hear something from you and so performed this sport. Will you answer a few questions?"

She was very much relieved. After all she was not humiliated by any human being, but by the Lord Himself!" With pleasure", she replied Thereupon Muruga posed four questions before her.

" What is hard?"

"Poverty is hard. poverty in young age is harder. Harder still is incurable disease. Exceedingly hard is faithless woman and the hardest is to take food from her."

"What is sweet?"

" Solitude is sweet. Sweeter is worship of the Lord. Still sweeter is the company of Godly men and sweetest is moving with them always, in the waking hours and in the dreams."

" What is great?"

" The world is big and Brahma its creator is bigger. He was born out of the navel of Vishnu. Vishnu sleeps on the ocean of milk. The oceans were all just one sip for the sage Agastya. He in turn was born out of a kumbha, an earthen pot. The pot is a piece of clay from the earth which is carried by a serpent Adisesha. The serpent is a ring on the little finger of Parvati, who is merged with the Lord Shiva. Shiva is contained in the hearts of his devotees. The greatness of these devotees is indeed indescribable."

"What is rare?"

" Rare is the human birth and rarer is birth without any deformity. Even after such birth, it is rare for one to be interested in culture and wisdom. Even if one has such an interest, it is rare to find one performing penance and doing charity. If one does penance and charity, then certainly the gates of heaven will be thrown open to one."

Muruga was pleased with the replies and blessing her, disappeared.

Avvai thereafter lived for a long time traversing the country far and wide, enjoining the people to live a good life, dedicated to God. All her words were pearls of wisdom and godliness, helping the people towards a higher spiritual life.


Once when asked to define the four purusharthas, she replied: " Giving alms is Dharma; Earning in the righteous path is Artha; perfect love between man and woman is Kama; relinquishing all these with the heart set on God is Moksha." On another occasion, she said: " That is true religion which perceives unity in all things; that is true learning which enables one's name to be kept alive for ever; and that indeed is true sustenance which does not make one a slave to another."

Finally, her life on earth itself ended with the bestowal of Divine Grace. During her last days, she was daily worshipping Ganesha. One day while performing the puja as usual she saw through her inner vision that her friend, Saint Sundara, had completed his mission on earth and was being taken to Kailas, the abode of Lord Shiva, at His command. She was also anxious to leave off her mortal coil and go to Kailas along with Sundara. So in her anxiety, she hurried with her puja. However, Lord Ganesha told her; " Grandma, do your puja as usual, without haste. We shall drop you in Kailas even before your friend arrives there." Avvai then performed her puja accordingly and sang a song on Lord Ganesha., how His infinite Grace helps mortals. When the puja was over, Ganesha lifted her with his trunk and placed her in Kailas. She was infinitely happy. Her song composed on the occasion is always sung throughout the land at the time of Ganesha worship, particularly on the Ganesh-chaturti day in July- August.

# SRI RAMAKRISHNAR


Sri Ramakrishna Parahamsa , the Messiah of undivided Bengal, the Prophet of Dakshineshwar, was both a phenomenon and an institution. His life and work, so mysterious and so sublime has been a landmark of the last century. During his life time his fame was confined to Bengal alone, but later he became a welknown spritual giant throughout the wide world. His brilliant and extraordinary disciples and monks spread his teachings and message to all corners of the globe. The message of Ramakrishna is as relevant today as it has ever been in the past. If it is practised and preached sincerely most of our present day evils and problems would disappear automatically. This biographical tract is more or less a compilation. I hope it would inspire the youngsters to go for the Master's detailed biographies which are a great source of spritual pleasure, enlightenment and profit.


Continuation from last Kalasam.........




The people around him couldn't understand the god- intoxicated state of Ramakrishna. They all concluded that he had really turned mad.


At last one day he could no longer remain without seeing the mother. He decided that either he would see her or end his life.




Ramakrishna felt life was worthless without seeing the mother. He snatched the sword hanging in the temple and decided to end his life. Mother, pleased with his devotion appeared before him and Gadai's heart filled with great joy. He found divine light
15

# சிறுவர் வரைந்த சித்திரங்கள்

## சிவபெருமான்



சைவ சமயத்தவர்களின் முழுமுதற்
கடவுள் சிவன். படைத்தல், காத்தல்,
அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும்
சிவன் காரணமாக உள்ளார்.
சிவனுடைய சரி பாதி சக்தி.
சிவன் இல்லாமல் சக்தியும், சக்தி
இல்லாமல் சிவனும் இல்லை.
சிவன் ஆதியும் அந்தமும் இல்லாத
அருட்பெரும் சோதி. சிவன் விருப்பு
வெறுப்பு அற்ற பரம் பொருள்.

தர்சனா நவேந்திரன் வயது 7

திகதி // 25/6/96

தர்சனா நவேந்திரன்- வயது 7



இவர் பிள்ளையார் கடவுள்
யானை முகம் உடையவர்.
இவருடைய வாகனம் எலி.
இவரை மூன்று முறை நெற்றியில்
குட்டி வணங்குவார்கள்.

**பவன் சசிகாந்தராசா(வயது 6)**

**கிங்ஸ்டன் தமிழ்க் கலாசாரக் கழகம்**

## GOD

God is everywhere, though we can not see him. We can imagine Him as anything; I find it easier to imagine God as human. God is in everyone and in everything. God wants us to live our lives in happiness and joy. Even though we might find it difficult, we must carry on trying to live our lives like God wants us to.

***Sivahamy Balakumar (9 years)***

# இந்துமதம்

இந்து சமயம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பம் ஆயிற்று. இந்துசமயம் நம்பிக்கை என்ற அடிப்படையை வைத்து முன்னேறிக்கொண்டு வருகிறது. உலகிலுள்ள மதங்களுக்கு முதலும் முன்னோடியானதும் இந்துமதம். இதை எந்த ஆதாரத்துடன் சொல்கிறேன் என்றால், மதம் முதலிலே தொடங்கியது இந்தியாவிலேதான் என்பதை ஒருவரும் மறுக்கவில்லை. இந்து சமயத்தில் சைவம், வைணவம் என இரண்டு பிரிவு உண்டு. இவைக்கு எதிராகச் சமணம் தோன்றியது. உலகத்தில் உள்ள எல்லா மதங்களுக்கும் அதைத் தோற்றியவர்களின் பெயர்தான் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்து மதத்துக்குத் தோற்றியவர் பெயரில்லை. தானாகவே தோன்றி இயங்கி வருகிறது. இந்து மதத்தில் மட்டுமே கடவுள்கள் தம்பதியாகக் காட்சியளிக்கிறார்கள்.

இந்து மதத்தில் தாயைக் கடவுளுக்கு அடுத்ததாக மதிக்கிறார்கள். ஏன் என்றால் எமது தாய்தான் நாம் உலகை அறியுமட்டும் எம்முடன் கூட இருந்து எம்மை மற்றவர்கள் பார்த்துப் போற்றும்படி வளர்க்கிறாள். நமது துன்பங்களிலும், இன்பங்களிலும் நமது தாய் கூடவே இருப்பாள்.

சைவம் அல்லது வைணவ மதத்தைச் சேர்ந்தவர்கள் திருநீறு அல்லது திருமண் நெற்றியிலே பூசுவார்கள். ஏன் என்றால் நமது உயிர் போனபின் நமது உடல் சாம்பலாகவும் மண்ணாகவும் போகும் என்ற எண்ணம் மனதிலே வர பாவம் செய்யத் தோன்றாது.

**மேனகா மாணிக்கவாசகர்**
**கிங்ஸ்டன் தமிழ்க் கலாசாரக் கழகம் (வயது 14)**

## நான் விரும்பும் பெரியார்

நான் விரும்பும் பெரியார் சுப்பிரமணிய பாரதியார். இவர் சிறந்த புலவர். அவர் பல சுவை நிறைந்த பாடல்களைப் பாடினார். பாரதியார் தமிழ் நாட்டில் எட்டயபுரத்தில் பிறந்தார். அவருடைய தந்தையார் சின்னச்சாமி ஐயர். தாயார் இலக்குமி அம்மாள். பாரதியார் இளமையிலேயே தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். ஆனாலும் தமிழிலேதான் பற்றுடையவராக இருந்தார். அவர் எதற்கும் அஞ்சமாட்டார்.

**ஆர்த்திகா கணேசன். சுவிட்சர்லாந்து.**

# ESSENTIAL ETHICS OF THE TAMILS

## ULAGA NEETHI

(உலக நீதி)

Or

Universal words of wisdom

### Tamil Text: Verse No 7

கருதாமல் கருமங்கள் முடிக்கவேண்டாம்
கணக்கு அழிவை ஒருநாளும் பேசவேண்டாம்
பொருவார் தம் போர்க்களத்தில் போகவேண்டாம்
பொதுநிலத்தில் ஒருநாளும் இருக்கவேண்டாம்
இருதாரம் ஒருநாளும் தேடவேண்டாம்
எளியோரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்
குருகாரும் புனம்காக்கும் ஏழைபங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய்நெஞ்சே!

**Katuthaamal Katumankal Mudikka Veindaam**
**Kanakku Azhylivai Otunaalum Peiasa Veindaam**
**Potuvaar Tham Poarkkalaththill Poaka Veindaaam**
**Pothu Nilaththil Otunaalum Itukka Veindaam**
**Ituthaatam Otu Naalum Theida Veindaam**
**Eliyoatai Ethitiddu-k-Kolla Veindaam**
**Kutukaatum Punam Kaakum Ezhai Pankan**
**Kumataverl Paathahthai Kooraay Nenchay**

### EXPLANATION

**Do not do anything without planning. Do not speak anything which is contrary to what is on record. Refrain from being present at a place where garrulous people are altercatimg. It is unsafe to live on a land which has no known owner. Do not commit the sin of bigamy. It is no good confronting the poor and the lowly. Sing in praise of Kumataverl who is the lord of Valli the protector of the farm frequented by the birds.**

S. SRIKANDARAJAH

### Tamil Text : Verse No 8

சேராத இடம் தனிலே சேரவேண்டாம்
செய்த நன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்
ஊரோடும் குண்டுணியாய்த் திரியவேண்டாம்
உற்றாரை உதாசினங்கள்சொல்லவேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோகித் திரியவேண்டாம்
வாராரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

### Transliteration

**Seiraatha Idam Thanilei Seia Veindaam**
**Setha Nanri Otunaalum Marakka Veindaam**
**Ootoadum Kunduniyaay Thitiya Veindaam**
**Uttraatai Uthaasinankal Solla Veindaam**
**Peitaana Kaatiyaththai Thavitkka Veindaam**
**Pinai Padduth Thunai Poakith Thitiya Veindaam**
**Vaataatum Kuravatudai Valli Pankan**
**Mayileirum Petumaalai Vaazhththay Nenchay**

### Explanation

**Don't get into bad company. Never forget the good deed one has done to you. Do not go round the village speaking ill of others. Do not speak disrespectfully about your kith and kin. Do not avoid undertaking great deeds that will yield name and fame to you. Don't get embroiled and agree to be a surety.**
**Oh you heart! Greet the peacock riding Murugan who is the partner of Valli of the gypsy tribe.**

**Ulga Neethi is an ethical work in tamil language. The author of this work is known as Ulaganathan. Not much is known about the author.It would appaear that he has been a devout devotee of Lord Murugan. There are thirteen verses in Ulganeethi of which the last one alone sheds some light on the life history of the author . Let us learn those Tamil verses and their English translations**

# *SAB* BUSINESS SYSTEMS LIMITED

## CANON COPIERS

## CANON FAX

## CANON PRINTERS

## COMPUTERS


**SALES & SERVICE**
**NEW & REFURBISHED**

# *SAB* BUSINESS SYSTEMS LTD

**28 AMBERLEY GARDENS, EPSOM SURREY, KT19 0NH**
**TELEPHONE : 0181 786 8083 FACSIMILE : 0181 224 5283**
**E-MAIL : MANO @ MAIL.PRO-NET.CO.UK**
**MOBILE: 0860 904467**

# சனி பகவான்

## -காக்கையூரான்-



நமது வாழ்க்கையை ஆட்டி வைப்பவை நவக்கிரகங்கள். அவற்றுள் ஈஸ்வரன் என்று போற்றப்படுபவர் சனிபகவான். தன்னுடைய வலிமையால் நன்மை தீமை இரண்டையும் பாரபட்சமின்றி வழங்கும் தன்மை படைத்தவர் இவர். சூரியனுக்கு மேற்குத்திக்கில் விளங்குபவர்.

சூரியனுக்கும் சயாதேவிக்கும் மகனாகப் பிறந்தவர் சனி பகவான். சனிபகவானின் மனைவி நீலாதேவி. இவளைத்தவிர மந்தாதேவி சேஷ்டாதேவி என்ற இரு மனைவிமார்களும் உள்ளனர்.

சனிபகவானுக்கும் நீலாதேவிக்கும் நீலாதேவிக்கும் பிறந்த மகன் குளிகன். வாரத்தில் சனிக்கு ஒருநாள் தான் உண்டு. ஆனால் குளிகனுக்கு ஒவ்வொருநாளும் ஒன்றரைமணி நேரம் உண்டு.

சனிபகவானுக்கு ஒரு முகமும் நான்கு கைகளும் உண்டு. மேல்வலது கையில் அம்பும் மேல் இடது கையில் வில்லும்

கீழ்க்கைகளில் வாளும், விரதமும் கொண்டவர். நீலநிறமுடையவர். கருப்பு நிற ஆடைகளிலும், நீலாம்பர மலர் மாலையிலும் பிரியமுடையவர். காக்கையை வாகனமாகக் கொண்டவர். எட்டுக் குதிரைகள் பூட்டிய இரும்புத்தேரில் பவனி வருபவர். .வர் தாமச குணமுள்ளவர். அசுபக்கிரகம், ஆயுள்காரர், இரும்பு, எண்ணெய், கருநிறத்தானிய பூமியில் புதைத்த புதையல் முதலியவற்றுக்கும் காரகர். இராகு கேதுகளுக்கு இவர் தலைவர்.

சனிபகவானின் பெரிய தாயார் சஞ்சிகை. அவர் இரண்டாவது மகன் யமன். பெரிய தாயாரை ஏளனமாகப் பேசினான் சனி. யமன் கோபமுற்று கையில் இருந்த தண்டத்தால் அடித்தான். சனியின் வலது கால் இதனால் ஊனமாயிற்று. இதனால் ஊனபாதன், மந்தன் என்ற பெயரை பெற்றான்.

மகரம், கும்பம் ஆகிய இரண்டு ராசிகளும் இவரது ஆட்சிபெற்ற வீடுகள். இயல்பாகவே சுக்கிரன், புதன் இருவருடனும் நட்பு உள்ளவர். குரு பகவானை சமமாக நேசிப்பவர். சனிபகவான் மனிதர்களை திசை மூலம் பத்தொன்பது வருடங்களும் கோசரப்படி ஏழரையாண்டுகளும் ஆட்சி செய்வார். முன் ராசியிலும், பின்ராசியிலும் சேர்ந்து ஏழரை வருடங்கள் மனிதர்களை பிடிக்கும்போது ஏழரை நாட்டு சனியாகவும் 8ம் இடத்தில் வரும்போது அஷ்டமத்து சனியாகவும் விளங்குவார்.

சனியைப்போல் கொடுப்பவரும் கிடையாது கெடுப்பவரும் கிடையாது என்பது ஒரு முதுமொழி. சனிபகவான் மிகுந்த கோபங் கொண்டவர். எந்தக் காரியங்களையும் தடைசெய்யும் வலிமை கொண்ட இவர் பிரளய காலத்தை போன்றவர்.

இவர் ஒரு ஸ்தோத்திரப்பிரியர். தன்னை மனத்தினால் துதிப்பவர்களுக்கு மற்றவர்களால் தீங்கு வராமல் தடுத்தும் தானும் தீமைசெய்யாமலும் இருப்பார். பஞ்சாட்சர ஜெபம் புரியும் இவர் சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர். காசி ஷேத்திரத்தில் சிவபெருமானை பூசித்து கிரக பலத்தைப் பெற்றவர்.


சனிக்கிழமைகளில் விரதம், ஸ்தோத்திரம், நீலநிறப்பூக்களால் அர்ச்சித்தல் எள் நெய் தீபம் ஏற்றுதல் , ஏழைகளுக்கு வழங்குதல், சனி முழுக்கு, சனித்துவம், காராம்பசு, தானம், காயத்திரி ஜெபம் போன்றவற்றை செய்வதன் மூலம் சனியால் வரம் எல்லா துன்பங்களையும் நீக்கலாம்.

ஆஞ்சநேயரை அர்ச்சித்தல், நீலக்கல் அணிதல், கருப்பு வஸ்திரம் தானம், எள்ளுதானம் கொடுத்தல், சத்திய நாராயன பீசை செய்தல் முதலியவற்றால் சனிக்கிரக தோஷம் நிவர்த்தியாகும்.

சனீஸ்வரனை வழிபட உகந்த தலம் திரு நள்ளாறு ஆகும்.

**திருநள்ளா ரதில் திருவருள் செய்தனை**
**பெருநல் லழகொடு பெருகவே இருந்தனை**
**கருநல் காகமே வாகனம் ஆக்கினை**
**சிறுநல் லௌரியனைக் காத்திட-வேணுமே.**

# அணங்கினர் அவை



**அணங்கினர் அவையை இறையருள் பெற்ற மகளிரும், இறையடியார்களின் அருட்கனிவில் திளைத்தும் நம்மவர்களால் அறியப்படாத மாதரும் பொலிவிப்பர். அவற்றுடன் பெண்கள் விரும்பும் கலைகளும் அதில் சிறந்து விளங்கிய பெண்டிரும் பாடல்களும் சிறுகுறிப்புகளும் பரிமளிக்கும்.**

**--சாலினி--**

**பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை, தூய்மை**
**இங்கெமக்கருள வல்ல இணையிலா எம்பிராட்டி**
**பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா**
**அங்கயற் கண்ணி மங்கை அடிக்கமலங்கள் போற்றி**
**--திருவிளையாடற் புராணம்--**

## மனைவியெனும் அருளமுதம்

"ஓலிபுனல் சூழ்சாத்தமங்கை நீலநக்கருக்கு அடியேன்" என சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டர் தொகையில் பாடப்பட்டவர் திருநீலநக்க நாயனார். நீர்வளமும், நிலவளமும் நிறைந்த சோழநாட்டில் சாத்தமங்கை என்னும் ஓர் அழகான ஊர் உண்டு. இப்போது அவ்வூர் சீயாத்தமங்கை என அழைக்கப்படுகின்றது. அந்த ஊரில் அந்தண குலத்தில் திருநீலநக்கர் என்னும் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர்

"சூடுவாள் பூங்கொன்றை சூடி உள் உருகித்
தேடுவாள் தேடிச் சிவன் கழலே சிந்திப்பாள்"

என வாழ்ந்து வந்த மங்கை ஒருத்தியை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார். அவர் மனைவி அவ்வூர் அயவந்தி என்னும் கோயிலில் இருந்த அயவந்தி நாதருக்கு கொன்றைமாலை சூட்டி தினந்தோறும் வழிபட்டு வந்தாள்.

ஒரு திருவாதிரை அன்று திருநீலநக்கர் அயவந்தி நாதரைத் தரிசிக்க விரும்பி தன் மனைவியுடன் கோயிலுக்குச் சென்றார். மனையாளும் பூசைக்கு வேண்டிய உதவிகளை அவருக்குச் செய்து தானும் வழிபட்டாள். பூசை முடிந்ததும் நீலநக்கர் தியானத்தில் அமர்ந்தார்.

அப்பொழுது சிவலிங்கத்தின் மேல் ஒரு சிலந்தி விழுந்தது. இதனைக் கண்ட நீலநக்கர்– மனைவி மனம் பதைத்து ஓடிச் சென்று அந்தச் சிலந்தியை வாயால் ஊதித் தள்ளி, சிலந்தி விழுந்த இடத்தில் தமது எச்சிலைத் துப்பினார். (குழந்தை மேல் சிலந்தி விழுந்தால், அதன் நஞ்சினால் கொப்புளம் உண்டாகாது இருப்பதற்கு, சிலந்தியை ஊதித் தள்ளிவிட்டு அவ்விடத்தில் எச்சில் பூசுவது வழக்கம்.)

இதனைக் கண்ட திருநீலநக்கர் கோபங் கொண்டு "அறிவில்லாதவளே! சிவலிங்கத்தின் மேல் யாராவது எச்சில் துப்புவார்களா?"என்று கேட்டார்.

"சிலந்தி சிவலிங்கத்தின்மேல் விழுந்தது. அதனை ஊதித் துப்பினேன்." என்று அம்மையார் கூறினார்.

திருநீலநக்கர் கோபத்தினால் மனைவியின் செயலின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை. மேலும் கோபம் கொண்டு "சிவலிங்கத்தின் மேல் எச்சில் உமிழ்ந்தாய். அடாத செயல் செய்த உன்னைத் துறந்தேன். இன்றுடன் நீ வேறு நான் வேறு. என்னை விட்டுப் போ" எனக் கூறி தன் பூசையை முடித்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்.

மனைவியார் பயத்துடன் அன்றிரவு கோயிலிலே தங்கிவிட்டார். அன்றிரவு நீலநக்கர் கனவில் இறைவன் தோன்றி "உன் மனைவி என்னைத் தன் குழந்தையாக எண்ணி அன்புடன் செய்த செய்கையை நீ தண்டித்தாய். அவள் எச்சில் உமிழ்ந்த இடம் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம் கொப்புளங்கள் வந்துவிட்டன. அவற்றை வந்து பார்." எனக்கூறினார். இதனை,

"பூதிப் புயத்தார் புயத்திற் சிலந்தி புகலுமஞ்சி
ஊதித் துமித்த மனைவியை நீப்பவப்பால வெல்லாம்
பேதித் தெழுந்தன காண் என்று பிஞ்ஞகன் காட்டுமவன்
நீதித் திகழ் சாத்தை நீலநக்கனெனும் வேதியனே"

எனத் திருத்தொண்டர் திருவந்தாதி குறிப்பிடுகின்றது. நீலநக்கரும் பொழுது விடிந்ததும் சிவலிங்கத்தைப் போய்ப் பார்த்தார். என்ன அதிசயம்! மனைவி உமிழ்ந்த இடம் தவிர்ந்த மற்றைய இடமெல்லாம் கொப்புளம் இருக்கக் கண்டார். மனைவியின் அன்பின் திறத்தை வியந்தார். மனைவியை அழைத்து வந்து நடந்தது கூறி சிவலிங்கத்தைக் காட்டினார். அவர் மனையாளும் இறைவனின் கருணையை வியந்து சிவலிங்கத்தை மலரிட்டுத் தொழுதாள். இதனைக் கேள்விப்பட்ட திருஞானசம்பந்தக் குழந்தையும் சாத்த மங்கைக்குச் சென்றபோது நீலநக்கர் வீட்டில் தங்கியிருந்து அந்த அம்மையாரை மகிழ்வித்தார். திருநீலநக்க நாயனரும் மனைவி என்னும் அருளமுதத்தால் திருஞான சம்பந்த சுவாமிகளால்,

"மறையினார் மல்குகாழித் தமிழ்
ஞானசம்பந்தன் மன்னும்
நிறையினார் நீலநக்கன் நெடுமா
நகரென்று தொண்டர்
அறையுமூர் சாத்த மங்கை........"

என தேவாரத்தில் வைத்துப் பாடப்பெற்ற பெருமையும் பெற்றார்.


# KSP SUPER FOODS

இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் தருவிக்கப்பட்ட
அத்தியாவசியப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்
பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஓடியோக்கள், சீடீக்கள்
மற்றும் பழைய புதிய வீடீயோப் படங்கள் அனைத்தும்
மலிவு விற்பனையில் மனநிறைவோடு பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்.

| | | |
|---|---|---|
| 447 Barking Road,<br>East Ham,<br>London E6<br>Tel : 0181 503 5483 | 318 High Street North,<br>Manor Park,<br>London E12 6SA<br>Tel : 0181- 471 7806,<br>0181 552 8053 | 169, Ilford Lane<br>Ilford<br>London<br>Tel : 0181 478 8432 |

KUMARANS

# KUMARANS

# குமரன்ஸ்

## தமிழ்க்கடை

## KUMARAN BOOK CENTRE

எம்மிடம்
தமிழ்
புத்தகங்களும்
விற்பனைக்குண்டு

அரசியல் பொருளாதார புத்தகங்களோடு பெருமளவிலான
ஈழ, தமிழக பிரபல எழுத்தாளர்களின் நாவல்களும்
திருவாசகம், திருப்புகழ், திருமுறைகள்
பண்டைத் தமிழ் இலக்கியங்கள்
ஆகியன நியாயமான விலையில் கிடைக்கும்

லீலா
தயாரிப்புகளின்
அங்கீகாரம்
பெற்ற
விநியோகஸ்தர்கள்

அரிசிமா, குத்தரிசி, மிளகாய்த்தூள் மற்றும் பல
லீலா தயாரிப்புகளை
எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**532-536 FOREST ROAD, WALTHAMSTOW,**
**LONDON E17 4NB**
**TEL : 0181 925 7720**
**FAX : 0181 925 7721**

# அன்பின் வழியில்..

-மலர்மகள்-

பெறுதற்கரிய பெருமை வாய்ந்தது இம் மானுடப்பிறவி. "அரிது அரிது மானுடராதலரிது" என ஔவைப் பிராட்டியாரும், "எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிது அரிது காண்" என தாயுமான சுவாமிகளும் இன்னும் பல அருளாளர்களும் இம் மானுடப் பிறவியின் உயர்வு பற்றிக் கூறிப் போந்துள்ளனர். கிடைத்தற்கரிய இப் பிறவியின் பயனைப் பெற அன்பு எனும் சக்தி வாய்ந்த பண்பு மிகவும் வேண்டற்பாலதொன்று. அன்பு எனும் சொல் நட்பு, பற்று, காதல், பக்தி என்று பரிணமித்துச் செல்கிறது.

இவ்வுலகில் சகல செல்வங்களையும் பெற்று ஆனந்தமாக வாழ்வதுதான் இப் பிறவியின் பயனா? இல்லை. மானுடப் பிறப்பெடுத்து நாம் இவ்வுயிருக்கு உய்வைத் தேட முயற்சிக்க வேண்டும். இஃதின்றேல் அறிவிலிகள் ஆவோம். இவ்வுயிருக்கு உறுதி பயப்பது அறம். இவ்வறத்தை மனதில் மாசின்றி உள்ளங் கனிந்த அன்போடு செய்வதே இறை பணியாகும். அன்பால். அறிவால், பொறாமை, ஆசை, கோபம். கடுஞ்சொல் ஆகியவற்றை நீக்கி. அன்பெனும் நீரைப் பாய்ச்சி அறத்தை வளர்ப்பது இல்வாழ்வான் கடமை.

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லால்"

எனும் வள்ளுவ முனியின் கூற்றுக்கியைய எல்லா உயிர்களிடத்தும் தயையுடன் கருணை காட்டுவோர் அறவோர் ஆகின்றனர். மேலும் தருமம் என்பது பயன் கருதாத உதவி. வலது கை செய்வது இடது கைக்குத் தெரியக்கூடாது எனப் பெரியோர் சொல்வர். இவற்றைக் கருத்திற் கொண்டு துன்புற்றோர்க்கு ஆறுதல் அளித்து வேண்டிய உதவிகளைச் செய்தும், கஷ்டப்பட்ட உயிர்களுக்கு ஆதரவளித்தும், தாம் கற்ற நல்லறிவை மற்றோர்க்கு வழங்கியும், சத்தியம், நேர்மை, நீதி இவற்றைக் கடைப்பிடித்தும் வாழ்வோர் அறத்தை வளர்ப்போர் ஆவர்.

அறத்தை வளர்த்து நல்வாழ்க்கை வாழ்வதற்கு கோபம், கடுஞ்சொல், ஆசை என்பன தடைக் கற்களாகும். ஆகவே இவற்றைக் களைந்து எல்லோருடனும் நட்புப் பூண்டு ஒழுகுவோர் உயிருக்கு உறுதுணை தேடுவோர் ஆவர். கோபமோ பொல்லாதது. அதை அன்பால் அடக்காவிடின் தன்னையே கொன்றுவிடும். தீமையை விளைவிக்கும். பகைமையைத் தோற்றுவிக்கும்.

"தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானம் என்றும்
இடுங்கோள் . . . . . வைவேல்
விடுங்கோனருள் தானேவந்து வெளிப்படுமே"

என அருணகிரி சுவாமிகள் கூறுகிறார். எனவே மனம் போன போக்கில் போகவிடாது கோபத்தை அன்பால் அடக்குவதால் இறையருள் தானே உயிருக்கு வந்தடையும்.

கடுஞ்சொற்களோ கேட்போர் மனதைப் புண்படுத்தும். உடம்பில் உண்டாய புண்கள் மாறி, இருந்த இடம் தெரியாமற் போய்விடும். ஆனால் நாவினாற் சுட்ட வடுவோ மாறாது. எனவே கடுஞ் சொற்களின் தாக்கத்தை உணர்ந்து இனிய சொற்களையே பேசல் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. "இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதே"என்பது ஔவையார் கூற்று. இன்சொல் யாவரையும் தன்பால் ஈர்க்கும் தன்மையது, மகிழ்ச்சியைத் தரவல்லது, நல்வாழ்க்கைக்கு உகந்தது. நட்புரிமையை ஆக்க வல்லது.

"அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு" எனத் திருவள்ளுவப்

பெருந்தகை கூறியவாறு எல்லோரிடத்தும் அன்பு பூண்டு ஒழுகுவதால் நட்பு என்னும் சிறந்த பண்பு ஏற்படும். யாம் எல்லோரும் தோழர்கள், எல்லோரும் இறைவனின் குழந்தைகள் என்ற பரந்த மனப்பான்மை மனதில் நிலைக்கும். இதனால் பொறாமை போன்ற தீய குணங்கள் அகலும். நல்லெண்ணங்கள் நற்சிந்தனைகள் உருவாகும். இறைவனிடத்து அன்பு உண்டாகும். வலுத்த அன்பே பற்று. செய்யும்

தொழில்கள் நற் கருமங்கள் ஆகியவற்றைப் பற்றுடன் செய்தால் மட்டுமே நற் பலாபலன்களைப் பெறலாம். ஆனால் இக் கருமங்களை யான் செய்தேன், யான் கர்த்தா, யான் அதிகாரி என்று எண்ணுவதால் யான், எனது என்னும் செருக்கு வந்தடையும். பற்றால் வந்த இச் செருக்கை அகற்றினால் தேவ உலகிலும் பார்க்க உயர்ந்த உலகம் புகலாம் என்கிறார் பொய்யில் புலவரான திருவள்ளுவப் பெருந்தகை. எனவே இச் செருக்கை அகற்ற பற்றற்றவனாகிய இறைவனின் திருவடியையே பற்றிப் பிடிக்க வேண்டும். இதற்கு, கோயில் வழிபாடு, இறைவனின் திருநாமங்களை எப்பொழுதும் உச்சரித்தல், விரதம் அநுஷ்டித்தல், அறிவான சமய நூல்களைக் கற்றல், உபந்நியாசங்கள் பக்திப்பாடல்கள் என்பவற்றைக் கேட்டல், சிவதொண்டு செய்தல் என்பன கருவிகளாக அமைந்துள்ளன. இவற்றை நடைமுறையிற் கைக்கொள்வதால் இறையன்பு ஊற்றெடுக்கும்; பற்றும் நீங்கும்.

இறைவனிடத்து மெய்யன்பைச் செலுத்துவதாலே பக்தி மேலிடும். "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?" நிரம்பிய பக்தியால் கண்ணீர் தானே சொரியும். இறைவனை நினைந்து நினைந்து உணர்ந்து, நெகிழ்ந்த அன்பால் நெக்கு நெக்குருகி கண்ணீர் சொரிந்து வழிபடுவதால் இறை அன்பு பெருகும். "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்பது மாணிக்கவாசகர் திருவாக்கு. அன்பில் திளைத்த பக்தர்களுக்கு இறைவன் தானே வந்து தொண்டு செய்வார். சிவபெருமானின் திருமுடி விறகுக் கட்டைச் சுமந்தது பாணபத்திரனின் அன்பினால் அன்றோ? திருமுடியிற் கண்ணப்பரின் செருப்பைச் சுமந்ததும், மண்சுமந்ததும் இன்னும் பலபிறவும் அளவற்ற அன்பின் சிறப்பைக் காட்டுகின்றன. தேவர்களைக் காக்க ஆலகால விஷத்தை அருந்திய சிவபெருமானின் நீலகண்டம், கருணையைக் காட்டும் சின்னமாக அமைந்துள்ளது. அன்பு வடிவான இறைவன் அன்புக்குத்தான் கட்டுண்பான். அன்பின்றேல் சிவனை அடையமுடியாது. இதற்குச் சான்றாக, அன்போடுருகி அகங்குழைவார்க்கல்லது என் பொன்மணியை அடைய ஒணாதே ..... திருமந்திரம், காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது .... தேவாரம், என்புருகிப் பாடுகின்றிலை, வல்வினையேன் அழுதால் உனைப் பெறலாமே ...... திருவாசகம், ஆகிய அடிகள் அமைகின்றன.

